# வரலாறு

1. **இந்தியாவில் பழைய கற்காலத்தைச் சார்ந்த ஓவியம் எங்கு அமைந்துள்ளது?**
A) கர்னூல், ஆந்திரப்பிரதேசம்
B) பிம்பேட்கா, மத்தியப் பிரதேசம்
C) சித்தன்ன வாசல், தமிழகம்
D) அஜந்தா

2. **இடைக்கற்கால காலத்தின் மற்றொரு பெயரென்ன?**
A) மேக்ரோலித்திக் காலம்
B) இரும்புக் காலம்
C) செம்புக்காலம்
D) மைக்ரோலித்திக் காலம்

3. **புதிய கற்காலத்தில் நிகழ்த்தப்பட்ட மாபெரும் சாதனை என்ன?**
A) வேளாண்மை
B) சக்கரம் கண்டுபிடிப்பு
C) அரசாங்கங்கள் உருவாக்கம்
D) நெருப்பு கண்டுபிடிப்பு

4. **ஹரப்பா நாகரிகம் எந்தக் காலத்தைச் சார்ந்தது?**
A) செம்புக்காலம்
B) இரும்புக்காலம்
C) மைக்ரோலித்திக் காலம்
D) புதிய கற்காலம்

5. **வேதகால நாகரிகம் பின்வரும் எந்தக் காலத்தைச் சார்ந்தது?**
A) இரும்புக்காலம்
B) செம்புக்காலம்
C) மைக்ரோலித்திக் காலம்
D) புதிய கற்காலம்

6. **மொகஞ்சதோராவைக் கண்டுபிடித்த தொல்லியல் ஆராய்ச்சியாளர் யார்?**
A) அலெக்சாண்டர் கன்னிங்காம்
B) ஆ.டி. பானர்ஜி
C) வி.டி. சவார்க்கர்
D) தயாராம் சாஹினி

7. **சிந்து சமவெளி மக்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் எதனைப் பயன்படுத்திக் கட்டப்பட்டன?**
A) களிமண்
B) கருங்கல்
C) சுண்ணாம்பு
D) செங்கல்

8. **சிந்து சமவெளி நாகரிகத்தின் செயற்கைத் துறைமுகம் எது?**
A) லோத்தல் B) சங்குதாரோ
C) மொகஞ்சதாரோ D) சுர்கோட்டா

9. **சிந்து சமவெளி மக்கள் வணங்கிய தெய்வம் எது?**
A) இந்திரன் B) வருணன்
C) பசுபதி D) விஷ்ணு

10. **ஆரியர்கள் இந்தியாவில் பின்வரும் எந்தக் கணவாய்களின் வழியே ஊடுருவினர்?**
A) கைபர் மற்றும் போலன்
B) ஷிப்கிலா
C) சொஜிலா D) நாதுலா

11. **ஆரியர்களின் முக்கியத் தொழில் யாது?**
A) போர்புரிதல் B) வேளாண்மை
C) யாகம் நடத்துதல் D) கால்நடை வளர்ப்பு

12. **மிகவும் பழைமையான மற்றும் முதன்முதலில் தோன்றிய வேதம் எது?**
A) ரிக் வேதம் B) யஜூர் வேதம்
C) சாம வேதம் D) அதர்வண வேதம்

13. **சடங்கின் போது இசைப்பதற்காகத் தோன்றிய வேதம் எது?**
A) ரிக் வேதம் B) சாம வேதம்
C) யஜூர் வேதம் D) அதர்வண வேதம்

1. (B) 2. (D) 3. (B) 4. (A) 5. (A) 6. (B) 7. (D) 8. (A) 9. (C) 10. (A) 11. (D) 12. (A) 13. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**14. மந்திரம், வேள்வி, பலியிடுதல் போன்றவற்றைப் பற்றி குறிப்பிடுவது எது?**
A) ஆரண்யங்கள் B) உபநிடதங்கள்
C) பிராமணங்கள் D) யஜூர் வேதம்

**15. ரிக்வேத காலத்தில் ஆரியர்கள் வாழ்ந்த இடம் தற்போது எங்குள்ளது?**
A) ஹரியானா, இந்தியா
B) காபூல், ஆப்கானிஸ்தான்
C) சிந்து, பாகிஸ்தான்
D) இராஜஸ்தான், இந்தியா

**16. வேதகால சமுதாயத்தின் அடிப்படை அலகு யாது?**
A) சபா B) கிராமம்
C) சமிதி D) குடும்பம்

**17. ஆரியர்களால் தென்னிந்தியா எவ்வாறு அழைக்கப்பட்டது?**
A) தட்சிணபாதம் B) தக்காணம்
C) ஆரியவர்த்தம் D) திராவிடவர்த்தம்

**18. பூசாரிகளின் ஆதிக்கம், வேள்விகள் மற்றும் சடங்குகள் எப்பொழுது முக்கியத்துவம் பெற்றன?**
A) குப்தர்களின் காலம்
B) முந்தைய வேதகாலம்
C) மௌரியர்களின் காலம்
D) பிந்தைய வேதகாலம்

**19. புத்த, சமண மதங்கள் தோன்ற முக்கியக் காரணம் யாது?**
A) சாதி ஏற்றத்தாழ்வுகள்
B) பூசாரிகளின் ஆதிக்கம் மற்றும் சடங்குகள்
C) வழிபாட்டுமுறைகள்
D) பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

**20. சமண சமயத்தை தோற்றுவித்த மகாவீரர் எத்தனையாவது தீர்த்தங்கரர் ஆவார்?**
A) 23 B) 21
C) 24 D) 25

**21. சமண சமயத்தின் இருபெரும் பிரிவுகள் யாவை?**
A) ஸ்வேதாம்பரர்கள்
B) திகம்பரர்கள்
C) களாமுகர்கள் மற்றும் சைவர்கள்
D) (A) மற்றும் (B)

**22. சமண சமயம் இரண்டாகப் பிரியும் போது திகம்பரர்கள் எனப்படும் ஆடையணியாதவர்களின் தலைவர் யார்?**
A) பத்திரபாகு B) ஸ்தூலபாகு
C) சந்திரகுப்தர் D) ரிஷப தேவர்

**23. சமணசமயத்தில் ஸ்வேதாம்பரர்கள் என்பவர்கள் யார்?**
A) வெள்ளையுடை அணிந்தவர்கள்
B) திசையை ஆடையாகக் கொண்டவர்கள்
C) மகாவீரரை கடவுளாக ஏற்றுக்கொண்டவர்கள்
D) மகாவீரரை மட்டும் பின்பற்றியவர்கள்

**24. கி.பி. 5–ஆம் நூற்றாண்டில் இரண்டாவது சமணசமய மாநாடு எங்கு நடைபெற்றது?**
A) இராஜகிரகம் B) காஷ்மீர்
C) குண்டல கிராமம் D) வாதாபி

**25. சந்திரகுப்த மௌரியர் சமண சமயத்தின் எப்பிரிவைச் சார்ந்தவர்?**
A) ஸ்வேதாம்பரர்
B) திகம்பரர்
C) இரண்டுமல்ல
D) அவர் புத்தசமயம் சார்ந்தவர்

**26. புத்தமதத்தைத் தோற்றுவித்த சித்தார்த்தர் பின்வரும் எந்த மரபைச் சார்ந்தவர்?**
A) லிச்சாவி மரபு B) சுங்க மரபு
C) சாக்கிய மரபு D) வர்தமான மரபு

**27. புத்தர் தனது முதல் உரையை நிகழ்த்திய இடம் எது?**
A) கயா B) சாரநாத்
C) குண்டலவனம் D) அயோத்தி

**28. 45 ஆண்டுகள் இடைவிடாமல் பிரச்சாரம் செய்த புத்தர் மரணமடைந்த இடம் எது?**
A) கபிலவஸ்த்து B) சாரநாத்
C) குசி நகரம் D) கயா

**29. சமணர்களின் சமய இலக்கியங்கள் எழுதப்பட்ட மொழி எது?**
A) பிராகிருதம் B) அர்த்தமகதி
C) சமஸ்கிருதம் D) பார்சி

14. (A) 15. (C) 16. (D) 17. (A) 18. (D) 19. (B) 20. (C) 21. (D) 22. (B) 23. (A)
24. (D) 25. (B) 26. (C) 27. (B) 28. (C) 29. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**30. புத்தசமயத்தின் புனித நூல் எனப்படுவது எது?**
A) அட்ட பீடகம் B) திரிபீடகம்
C) நேமிநாதம் D) பரிசுத்த பீடகம்

**31. பர்மா, ஜப்பான், திபெத் போன்ற நாடுகளில் புத்தமதம் பரவக் காரணமான அரசர் யார்?**
A) கனிஷ்கர் B) அசோகர்
C) பிம்பிசாரர் D) அஜாதசத்ரு

**32. இலங்கை மற்றும் மேற்கு ஆசிய நாடுகளுக்கு புத்த சமயத்தைப் பரப்ப தூதுவர்களை அனுப்பிய மன்னன் யார்?**
A) கனிஷ்கர் B) அஜாதசத்ரு
C) பிம்பிசாரர் D) அசோகர்

**33. கீழ்க்கண்ட யாருடைய காலத்தில் புத்தசமயம் மஹாயானம், ஹீனயானம் என இரு பிரிவுகளாகப் பிரிந்தது?**
A) பிம்பிசாரர் B) அசோகர்
C) கனிஷ்கர் D) அஜாதசத்ரு

**34. கி.மு. 483–இல் முதலாவது புத்த சமய மாநாட்டினை இராஜகிரகத்தில் கூட்டிய மன்னன் யார்?**
A) அஜாதசத்ரு B) பிம்பிசாரர்
C) காலசோகர் D) அசோகர்

**35. கனிஷ்கரால் காஷ்மீரின் குண்டலவானாவில் கூட்டப்பட்ட புத்தசமய மாநாடு எத்தனையாவது புத்தசமய மாநாடு?**
A) முதலாவது B) இரண்டாவது
C) நான்காவது D) மூன்றாவது

**36. பிம்பிசாரன், அஜாதசத்ரு போன்றோர் பின்வரும் எந்த நாட்டின் ஆட்சியாளர்கள்?**
A) அவந்தி B) மகதம்
C) கோசலம் D) லிச்சாவி

**37. சிசுநாக வம்சத்தையடுத்து மகதப் பேரரசை ஆட்சி செய்த வம்சம் எது?**
A) நந்த வம்சம் B) மௌரிய வம்சம்
C) குப்த வம்சம் D) சுங்க வம்சம்

**38. அலெக்சாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த போது வட இந்தியாவிலிருந்த முக்கிய அரசு எது?**
A) குப்தர்களின் பாடலிபுத்திர அரசு
B) நந்தர்களின் மகத அரசு
C) சாதவாகனர்களின் அமராவதி அரசு
D) மௌரியர்களின் மகத அரசு

**39. இந்தியாவிற்கெதிராக படையெடுத்த முதல் அந்நியப் படையெடுப்பாளர் யார்?**
A) அலாவுதீன் கில்ஜி
B) அலெக்சாண்டர்
C) செங்கிஸ்கான்
D) அக்கமேனியாவின் சைரஸ்

**40. அலெக்சாண்டர் மற்றும் புருஷோத்தமன் (போரஸ்) இடையே நடைபெற்ற போரின் பெயரென்ன?**
A) ஹைடாஸ்பஸ் போர்
B) ராக்ஷ ஹைதாங்கடி போர்
C) முதலாம் தரெயின் போர்
D) முதலாம் பானிபட் போர்

**41. அலெக்சாண்டர் வெற்றி கொண்ட இந்தியப் பகுதிகளை அவரின் பிரதிநிதியாக ஆட்சிபுரிந்தவர் யார்?**
A) சந்திரகுப்தர்
B) செல்யூகஸ் நிகேடர்
C) தனநந்தர்
D) போரஸ்

**42. மௌரிய வம்சத்தை சாணக்கியரின் உதவியுடன் தோற்றுவித்தவர் யார்?**
A) அசோகர் B) சந்திரகுப்தர்
C) பிந்துசாரன் D) சமுத்திரகுப்தர்

**43. சந்திரகுப்தரின் அவையிலிருந்த கிரேக்கத் தூதர் யார்?**
A) மெகஸ்தனிஸ் B) செல்யூகஸ் நிகேடர்
C) அம்பி D) போரஸ்

**44. 'அமித்ரகாதன்' எனப்படும் பிந்துசாரனின் அவையிலிருந்த சிரிய நாட்டு தூதர் யார்?**
A) மெகஸ்தனிஸ் B) போரஸ்
C) டைமக்கஸ் D) செல்யூகஸ் நிகேடர்

30. (B) 31. (A) 32. (D) 33. (C) 34. (A) 35. (C) 36. (B) 37. (A) 38. (B) 39. (D)
40. (A) 41. (B) 42. (B) 43. (A) 44. (C)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**45. அசோகரின் கலிங்கப்போர் வெற்றி பற்றிய கல்வெட்டு எது?**
A) 13–ஆவது கல்வெட்டு
B) 2–ஆவது கல்வெட்டு
C) 8–ஆவது கல்வெட்டு
D) 5–ஆவது கல்வெட்டு

**46. அசோகரை புத்த மதத்திற்கு மதமாற்றம் செய்த புத்தபிக்கு யார்?**
A) கவுண்டில்யா B) உபகுப்தர்
C) வஸ்ப்பா D) அஸ்வஜித்

**47. மௌரிய வம்சத்தின் கடைசி அரசனான பிருகத்ரதனை படுகொலை செய்து சுங்கவம்சத்தை தோற்றுவித்தவன் யார்?**
A) அக்னிபுத்ரன் B) வாசுதேவன்
C) தேவபூதி D) புஷ்யமித்ரன்

**48. மௌரிய வம்சத்தின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணம் யாது?**
A) அளவுகடந்த ஆட்சிப்பகுதி
B) அதீத அகிம்சைக் கொள்கை
C) போதிய படைபலமின்மை
D) போதிய போர்வீரர்களின்மை

**49. சுங்க வம்சத்தின் கடைசி மன்னன் தேவபூதியைக் கொன்று 'வாசுதேவர்' துவங்கிய வம்சம் எது?**
A) பாலர் வம்சம் B) கன்வ வம்சம்
C) சேதி வம்சம் D) சாதவாகன வம்சம்

**50. சாதவாகனர்கள் பின்வரும் எந்தப் பகுதியை ஆட்சிபுரிந்தனர்?**
A) வட இந்தியா B) மைசூர்
C) வங்காளம் D) தக்காணம்

**51. குஷாண மரபைத் தோற்றுவித்தவர் யார்?**
A) குஜூலா காட்பீசஸ் B) வீமா காட்பீசஸ்
C) கனிஷ்கர் D) கிபுநாடா

**52. குஷாண மரபின் சிறப்புமிக்க ஆட்சியர் யார்?**
A) குஜூலா காட்பீசஸ் B) வீமா காட்பீசஸ்
C) கிபுநாடா D) கனிஷ்கர்

**53. இந்திய மற்றும் கிரேக்க – ரோமானியக் கூறுகளடங்கிய புகழ்பெற்ற கலையின் பெயர் என்ன?**
A) அமராவதி கலை B) காந்தாரக் கலை
C) மதுரா கலை D) திராவிடக் கலை

**54. மதுரா கலைப்பாணியில் சிலைகளை வடிக்க பயன்படுத்தப்பட்ட கற்கள் எவை?**
A) கருப்பு பளிங்குக் கற்கள்
B) வெண் பளிங்குக் கற்கள்
C) வெள்ளை புள்ளியுடைய மணற்கற்கள்
D) சிவப்பு புள்ளியுடைய மணற்கற்கள்

**55. கீழ்க்கண்ட எந்தக் கலையில் சிலைகள் வடிக்க வெண்சலவைக் கற்கள் பயன்படுத்தப்பட்டன?**
A) மதுரா கலை B) காந்தாரக் கலை
C) அமராவதி கலை D) திராவிடக் கலை

**56. குப்த மரபைத் தோற்றுவித்தவர் யார்?**
A) உபகுப்தர் B) ஸ்ரீகுப்தர்
C) சமுத்திரகுப்தர் D) சந்திரகுப்தர்

**57. சமுத்திர குப்தரின் ஆட்சி குறித்த விவரங்களைக் குறிப்பிடும் கல்வெட்டு எது?**
A) அலகாபாத் கல்வெட்டு
B) ஹதிகும்பா கல்வெட்டு
C) காஷ்மீர் கல்வெட்டு
D) சாரநாத் கல்வெட்டு

**58. குப்தர்களின் மாற்றுத் தலைநகராக விளங்கிய நகரம் எது?**
A) அமராவதி
B) பாடலிபுத்திரம்
C) உஜ்ஜைனி
D) தானேஷ்வரம்

**59. 'விக்ரமாதித்தன்' எனும் பட்டப் பெயரை பெற்ற குப்த மன்னன் யார்?**
A) முதலாம் சமுத்திரகுப்தன்
B) முதலாம் சந்திரகுப்தர்
C) இரண்டாம் சமுத்திரகுப்தன்
D) இரண்டாம் சந்திரகுப்தர்

**60. இரண்டாம் சந்திரகுப்தரின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த சீனப்பயணி யார்?**
A) பாஹியான் B) யுவான் சுவாங்
C) சங்யென் D) மெகஸ்தனிஸ்

45. (A) 46. (B) 47. (D) 48. (B) 49. (B) 50. (D) 51. (A) 52. (D) 53. (B) 54. (D)
55. (C) 56. (B) 57. (A) 58. (C) 59. (D) 60. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**61. புகழ்பெற்ற நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவிய மன்னன் யார்?**
A) உபகுப்தர் B) அசோகர்
C) குமாரகுப்தர் D) கனிஷ்கர்

**62. குப்த பேரரசு மறையக் காரணம் யாது?**
A) மௌரியர்களின் எழுச்சி
B) ஹூணர்களின் படையெடுப்பு
C) பஞ்சம் D) உள்நாட்டுக் குழப்பம்

**63. 'நவரத்தினங்கள்' எனப்படும் அவை பின்வரும் எந்த மன்னனின் அவையை அலங்கரித்தது?**
A) முதலாம் சந்திரகுப்தர்
B) அசோகர்
C) இரண்டாம் சந்திரகுப்தர்
D) சத்ரபதி சிவாஜி

**64. குப்தர்களின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த மருத்துவமேதை யார்?**
A) அகத்தியர் B) வாக்பதர்
C) தன்வந்திரி D) சுஸ்ருதர்

**65. ஹர்ஷவர்தனரின் தலைநகராக விளங்கிய நகரம் எது?**
A) பாடலிபுத்திரம் B) தானேஸ்வரம்
C) இந்திரப்பிரஸ்தம் D) கனோஜ்

**66. ஹர்ஷவர்தனரின் ஆட்சிகாலத்தில் வருகை புரிந்த சீனப்பயணி யார்?**
A) பாஹியான் B) யுவான்சுவாங்
C) இபின் பதூதா D) மெகஸ்தனிஸ்

**67. மேலைச் சாளுக்கியர்களின் தலைநகரம் எது?**
A) மான்யகேடகம் B) வேங்கி
C) வாதாபி D) காஞ்சி

**68. சாளுக்கிய வம்சத்தை முறியடித்து தோன்றிய வம்சம் எது?**
A) பல்லவ வம்சம்
B) இராஷ்டிரகூட வம்சம்
C) மேலைச் சாளுக்கிய வம்சம்
D) சோழ வம்சம்

**69. இராஷ்டிரகூடர்களின் தாய்மொழி எது?**
A) தெலுங்கு B) தமிழ்
C) ஒரியா D) கன்னடம்

**70. இராமேஸ்வரத்திலுள்ள கிருஷ்ணேஸ்வரர் ஆலயத்தை கட்டியவர் யார்?**
A) முதலாம் கிருஷ்ணன்
B) மூன்றாம் கிருஷ்ணன்
C) முதலாம் கோவிந்தர்
D) இரண்டாம் கோவிந்தர்

**71. எல்லோரா எலிபெண்டா குகைக்கோயிலை கட்டியவர்கள் யார்?**
A) இராட்டிரகூடர் B) சாளுக்கியர்கள்
C) பாலர்கள் D) இராஜபுத்திரர்கள்

**72. பிரதிகாரர்களின் தலைநகரம் எது?**
A) தானேஸ்வரம் B) ஜெய்ப்பூர்
C) கன்னோஜ் D) புதுடெல்லி

**73. 1191–ஆம் ஆண்டில் நடந்த முதலாம் தரெயின் போரில் ஈடுபட்டவர்கள் யாவர்?**
A) அலெக்சாண்டர் – போரஸ்
B) பிரிதிவிராஜன் – முகமது கோரி
C) அசோகர் – கலிங்க மன்னன்
D) பிரிதிவிராஜன் – முகமது கஜினி

**74. இராஜேந்திர சோழனிடம் தோல்விடையந்த பாலர் மரபைச் சார்ந்த மன்னன் யார்?**
A) தர்மபாலன் B) கோபாலன்
C) தேவபாலன் D) மகிபாலன்

**75. பூரிஜெகந்நாதர் ஆலயத்தை கட்டியவர்கள் யார்?**
A) பாலர்கள் B) கலிங்க மன்னர்கள்
C) இராஜபுத்திரர்கள் D) மௌரியர்கள்

**76. கி.பி. 1025–இல் குஜராத்தின் சோமநாதபுர ஆலயத்தை கொள்ளையடித்தவர் யார்?**
A) அலாவுதீன் கில்ஜி B) முகமது கோரி
C) மாலிக் கபூர் D) கஜினி முகமது

**77. கி.பி. 1206–இல் டெல்லி சுல்தானியத்தை நிறுவியவர் யார்?**
A) குத்புதீன் ஐபெக் B) இரசியா பேகம்
C) பாபர் D) முகமது கோரி

**78. குத்புதீன் ஐபெக்கின் தலைநகரம் எது?**
A) தட்ஷசீலம் B) புதுடெல்லி
C) மகதம் D) லாகூர்

61. (C) 62. (B) 63. (C) 64. (B) 65. (D) 66. (B) 67. (C) 68. (B) 69. (D) 70. (B)
71. (A) 72. (C) 73. (B) 74. (D) 75. (C) 76. (D) 77. (A) 78. (D)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com

www.surabooks.com



**79. டெல்லி சுல்தானியத்தின் தலைநகரை லாகூரிலிருந்து டெல்லிக்கு மாற்றியவர் யார்?**
**A)** குத்புதீன் ஐபக் **B)** இல்டுமிஷ்
**C)** பால்பன் **D)** பாபர்

**80. நிலஅளவைமுறை, குதிரைக்கு சூடுபோடும் முறை மற்றும் அங்காடி சீர்திருத்தம் ஆகியவற்றை கொண்டு வந்தவர் யார்?**
**A)** ஷெர்ஷா சூரி **B)** அலாவுதீன் கில்ஜி
**C)** முகமது கஜினி **D)** பாபர்

**81. இராஜபுத்திரர்களின் பழக்கவழக்கங்களில் ஒன்றான 'ஜவுஹர் முறை' என்பது என்ன?**
**A)** படையெடுத்தல் **B)** பெண்கள் தீக்குளிப்பு
**C)** தற்கொலை
**D)** சமாதான பேச்சுவார்த்தை

**82. முகமது பின் துக்ளக்கின் உண்மையான பெயர் என்ன?**
**A)** அபுல்காசிம் **B)** உலூக்கான்
**C)** குஸ்ரூகான் **D)** ஜீனாகான்

**83. தைமூர் இந்தியாவின் மீது படையெடுத்தது எப்பொழுது?**
**A)** 1398 **B)** 1389
**C)** 1399 **D)** 1397

**84. இந்தியாவின் மீது படையெடுக்க பாபருக்கு அழைப்பு விடுத்தவர் யார்?**
**A)** ஷெர்கான் **B)** தௌலத்கான் லோடி
**C)** சிக்கந்தர் லோடி **D)** இப்ராஹிம் லோடி

**85. முகமது பின் துக்ளக்கினால் ஏற்படுத்தப்பட்ட 'திவானி இ–கோஹி' என்பது கீழ்க்கண்ட எந்தத் துறையைக் குறிக்கின்றது?**
**A)** இராணுவத்துறை **B)** வருவாய்த் துறை
**C)** வணிகத்துறை **D)** வேளாண்மைத் துறை

**86. டெல்லி சுல்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் இந்துக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**
**A)** ஒதுக்கிவைப்பட்டவர்கள்
**B)** உயர்ந்தவர்கள்
**C)** வைதீகர்கள்
**D)** சிம்மிக்கள்

**87. குதுப்மினார் யாருடைய நினைவாகக் கட்டப்பட்டது?**
**A)** குத்புதீன்ஐபெக்
**B)** குத்புதீன் பக்தியார் கில்ஜி
**C)** இரசியா பேகம்
**D)** முகமது கோரி

**88. டெல்லியிலுள்ள கோட்லா கோட்டையைக் கட்டியவர் யார்?**
**A)** ஷெர்ஷா சூரி **B)** முகமது பின் துக்ளக்
**C)** பிரோஸ் துக்ளக் **D)** இப்ராஹிம்லோடி

**89. கியாசுதீன் துக்ளக்கின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் நூல்**
**A)** துசுகி–இ–பாபரி **B)** துக்ளக் நாமா
**C)** அக்பர்–இ–நாமா **D)** தாரிக்–இ–இலாய்

**90. இராஜதரங்கிணி எனும் நூலை இயற்றியவர் யார்?**
**A)** வால்மீகி **B)** வேதவியாசர்
**C)** காளிதாசர் **D)** கல்ஹணர்

**91. அத்வைத கோட்பாட்டை பரப்பிய சங்கரர் எங்கு பிறந்தார்?**
**A)** கும்பகோணம் **B)** ஸ்ரீவில்லிபுத்தூர்
**C)** காலடி **D)** காஞ்சி

**92. வசிஷ்டாத்வைதம் எனும் கோட்பாட்டை பரப்பியவர் யார்?**
**A)** சங்கரர் **B)** திருமூலர்
**C)** இராமானுஜர் **D)** விவேகானந்தர்

**93. இடைக்கால பக்தி இயக்கத்தின் தூண் யார் / யாவர்?**
**A)** குருநானக்
**B)** கபீர்
**C)** (A), (B), (C) மூன்றும்
**D)** இராமானந்தர்

**94. சீக்கிய மதத்தை தோற்றுவித்த குருநானக்கின் குரு யார்?**
**A)** இராமானந்தர்
**B)** கபீர்
**C)** இராமானுஜர்
**D)** மேற்கண்ட எவரும் இல்லை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 79. (B) | 80. (B) | 81. (B) | 82. (D) | 83. (A) | 84. (B) | 85. (D) | 86. (D) | 87. (B) | 88. (C) |
| 89. (B) | 90. (D) | 91. (C) | 92. (C) | 93. (C) | 94. (B) | | | | |



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**95. விஜயநகரம் பேரரசினைத் தோற்றுவித்த ஹரிஹரரும் புக்கரும் பின்வரும் எந்த மரபைச் சார்ந்தவர்கள்?**
A) சங்கம B) சாளுவ
C) துளுவ D) ஆரவீடு

**96. விஜயநகரப் பேரரசின் அழிவிற்கு வழிவகுத்த போர் எது?**
A) மதுரைப்போர் B) ஹைடாஸ்பஸ்
C) ராக்ஷ ஹைதாங்கிடி D) தக்கோலப் போர்

**97. துசுகி இ பாபரி எனும் பாபரின் நினைவுக் குறிப்புகள் பின்வரும் எந்த மொழியில் இயற்றப்பட்டது?**
A) அரபு B) பாரசீகம்
C) உருது D) துருக்கி

**98. முகலாயர்கள் பின்வரும் எவரின் வழிவந்தவர்கள்?**
A) ஈரானியர்கள் B) தைமூர்
C) பாரசீகர்கள் D) ஆப்கானியர்கள்

**99. ஹுமாயூன் பின்வரும் எந்த மன்னரால் தோற்கடிக்கப்பட்டு நாடோடி வாழ்க்கைக்கு ஆளானார்?**
A) ஹெமு B) அக்பர்
C) ஷெர்ஷா சூரி D) பாபர்

**100. ஷெர்ஷாவின் ஆட்சியில் சிறப்பாக இருந்தது எது?**
A) வரிவசூல் B) இராணுவம்
C) சட்டம் ஒழுங்கு D) வேளாண்மை

**101. அக்பரின் ஆட்சிக்காலத்தில் நிலவருவாய் முறையின் பெயர் என்ன?**
A) ஜப்தி B) மன்சப்தாரி
C) தண்டல் D) தீன் இலாஹி

**102. அக்பர் தோற்றுவித்த மதத்தின் பெயர் என்ன?**
A) ஜெராஸ்டிரம் B) மன்சப்தாரி
C) தீன் இலா ஹி D) சூஃபி

**103. ஐந்தாவது சீக்கிய குருவான 'அர்ஜுன் சிங்கை' சிரச்சேதம் செய்த முகலாய அரசன் யார்?**
A) ஷாஜகான் B) ஜஹாங்கீர்
C) ஔரங்கசீப் D) ஷா ஆலம்

**104. ஷாஜகானின் இயற்பெயர் என்ன?**
A) குர்ரம் B) மூசா
C) சலீம் D) குஸ்ரூ

**105. ஆலம்கீர் என்ற பட்டப்பெயரை உடைய முகலாய அரசர் யார்?**
A) ஔரங்கசீப் B) அக்பர்
C) ஷாஜகான் D) ஜஹாங்கீர்

**106. அக்பரால் நீக்கப்பட்ட ஜிஸியா எனும் புனிதப்பயண வரியை மீண்டும் விதித்தவர் யார்?**
A) ஷாஜகான் B) ஔரங்கசீப்
C) பெரோஸ் ஷா துக்ளக் D) தௌலத்கான் லோடி

**107. நாதீர்ஷா பின்வரும் எந்த முகலாய மன்னனை சிறை பிடித்தார்?**
A) ஷா ஆலம் I B) ஷா ஆலம் II
C) ஔரங்கசீப் D) முகமதுஷா (ரங்கீலா)

**108. 1498–இல் முதன் முதலில் கடல் மார்க்கமாக இந்தியா வந்த ஐரோப்பியரான வாஸ்கோடகாமா பின்வரும் எந்த நாட்டைச் சார்ந்தவர்?**
A) இத்தாலி B) போர்ச்சுக்கல்
C) ஸ்பெயின் D) பிரான்ஸ்

**109. கிழக்கிந்திய வணிகக் கம்பெனி எப்போது உருவாக்கப்பட்டது?**
A) 1605 B) 1599
C) 1653 D) 1611

**110. இந்தியாவில் டேனியர்களின் தலைநகரம் எது?**
A) பழவேற்காடு B) தரங்கம்பாடி
C) பாண்டிச்சேரி D) சொராம்பூர்

**111. பக்ஸார் போரில் ஆங்கிலேயரிடம் தோல்வியுற்ற முகலாய அரசன் யார்?**
A) ஷாஆலம்-II B) ஷாஆலம்-I
C) இரண்டாம் அக்பர் D) ஔரங்சீப்

**112. கடைசி முகலாய அரசர் யார்?**
A) ஔரங்கசீப்
B) ஷாஆலம்-II
C) அக்பர்-II
D) பகதூர்ஷா-II

95. (A) 96. (C) 97. (D) 98. (B) 99. (C) 100. (C) 101. (A) 102. (C) 103. (B) 104. (A)
105. (A) 106. (B) 107. (D) 108. (B) 109. (B) 110. (D) 111. (A) 112. (D)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



113. 1757–இல் நடைபெற்ற பிளாசிப் போரில் ஆங்கிலேயருடன் போரிட்டவர் யார்?
A) சுஜா உத்தௌலா
B) நவாப் அன்வாருத்தீன்
C) அலிவர்திகான்
D) சிராஜ் உத்தௌலா

114. இந்தியாவில் முதன்முதலாக இரட்டையாட்சி முறை எங்கு அறிமுகப்படுத்தப்பட்டது?
A) மெட்ராஸ் B) மைசூர்
C) வங்காளம் D) ஐதராபாத்

115. 'ஜிட் முகமது ஷாஜி' எனும் வானிலை அட்டவணையை வெளியிட்டவர் யார்?
A) அக்பர் B) ஜஹாங்கீர்
C) ராஜா ஜெய்சிங் D) சிவாஜி

116. 1775 – 82 இல் நடைபெற்ற முதல் ஆங்கிலேய – மராத்திய போரின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம்
A) சல்பாய் ஒப்பந்தம் B) மும்பை ஒப்பந்தம்
C) சூரத் ஒப்பந்தம் D) பசைன் ஒப்பந்தம்

117. துப்பாக்கிப்போர் (Battle of Guns) என வர்ணிக்கப்பட்ட போர் எது?
A) முதல் கர்நாடகப் போர்
B) முதல் மைசூர் போர்
C) முதல் ஆப்கானிய–ஆங்கிலப் போர்
D) முதல் சீக்கிய – ஆங்கிலப் போர்

118. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் யார்?
A) அக்பர் B) ஷெர்ஷா
C) தாமஸ் மன்றோ D) சிவாஜி

119. கல்கத்தாவில் புகழ்மிக்க 'வில்லியம் கோட்டை கல்லூரி'யை கட்டியவர் யார்?
A) டல்ஹௌசி B) கர்சன்
C) வெல்லெஸ்லி பிரபு D) வில்லியம் பெண்டிங்

120. துணைப்படைத் திட்டத்தை அறிமுகப்படுத்திய ஆங்கிலேய ஆளுநர் யார்?
A) டல்ஹௌசி B) வெல்லெஸ்லி பிரபு
C) கானிங் பிரபு D) வில்லியம் பென்டிங்

121. வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்த ஆங்கில ஆளுநர் யார்?
A) வெல்லெஸ்லி பிரபு B) கர்சன்
C) கானிங் பிரபு D) டல்ஹௌசி பிரபு

122. இந்தியாவில் இருப்புப் பாதை, தந்தி முறை போன்றவற்றை ஏற்படுத்தியவர் யார்?
A) வெல்லெஸ்லி பிரபு B) டல்ஹௌசி பிரபு
C) கானிங் பிரபு D) கர்சன்

123. சென்னை – அரக்கோணம் இருப்புப்பாதை எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?
A) 1854 B) 1856
C) 1868 D) 1853

124. 1857 பெரும் புரட்சியின் போது இந்தியாவின் தலைமை ஆளுநராக பதவி வகித்தவர் யார்?
A) கானிங் பிரபு B) கர்சன் பிரபு
C) ரிப்பன் பிரபு D) லிட்டன் பிரபு

125. 1857 பெரும் புரட்சியினை பரத்பூரில் துவக்கி வைத்தவர் யார்?
A) திப்புசுல்தானின் இளைய மகன்
B) ஷா ஆலம்-II
C) இராணி லட்சுமிபாய்
D) மங்கள் பாண்டே

126. இந்திய மக்களின் மகாசாசனம் அல்லது விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை எப்போது வெளியிடப்பட்டது?
A) 1858 B) 1856
C) 1947 D) 1857

127. இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடி யார்?
A) இராமகிருஷ்ண பரமஹம்சர்
B) இராஜாராம் மோகன்ராய்
C) தயானந்த சரஸ்வதி
D) விவேகானந்தர்

128. 'சதி' எனும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை 1829–இல் தடைசெய்தவர் யார்?
A) இராஜா ராம்மோகன்ராய்
B) வில்லியம் பென்டிங்
C) கர்சன் பிரபு
D) டல்ஹௌசி

113. (D) 114. (C) 115. (C) 116. (A) 117. (D) 118. (C) 119. (C) 120. (B) 121. (D) 122. (B) 123. (B) 124. (A) 125. (D) 126. (A) 127. (B) 128. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**129. இராஜாராம் மோகன்ராயின் சிந்தனைகளைப் பரப்ப 'தத்துவ போதினி' சபாவை நிறுவியவர் யார்?**
A) தயானந்த சரஸ்வதி
B) தேவேந்திரநாத் தாகூர்
C) ஆத்மராம் பண்டரிநாத்
D) கேசப் சந்திரசென்

**130. இந்திய பிரம்ம சமாஜம் கேசப் சந்திரசென்னால் எப்போது துவக்கப்பட்டது?**
A) 1875 B) 1840
C) 1890 D) 1838

**131. ஆரிய சமாஜத்தை நிறுவிய தயானந்த சரஸ்வதியின் புகழ்பெற்ற முழக்கம் யாது?**
A) வேதங்களை நோக்கி செல்
B) டெல்லியை நோக்கி செல்
C) கல்வியை நோக்கி செல்
D) மேற்கண்ட எதுவுமில்லை

**132. இந்து சமயத்தின் மார்டின் லூதர்கிங் என்றழைக்கப்பட்டவர் யார்?**
A) தயானந்த சரஸ்வதி
B) இராஜாராம் மோகன்ராய்
C) இராமகிருஷ்ணன்
D) விவேகானந்தர்

**133. இராமகிருஷ்ண மடம் (1886), இராமகிருஷ்ணமிஷன் (1897) ஆகியவற்றை தோற்றுவித்தவர் யார்?**
A) சாரதா அம்மையார் B) விவேகானந்தர்
C) சகோதரி நிவேதிதா D) இராமகிருஷ்ணர்

**134. சுவாமி விவேகானந்தர் உரையாற்றிய புகழ்பெற்ற சிகாகோ மாநாடு நடைபெற்ற ஆண்டு எது?**
A) 1896 B) 1893
C) 1900 D) 1892

**135. 1875–இல் நியூயார்க்கில் பிரம்மஞான சபையைத் தோற்றுவித்தவர் யார்?**
A) அன்னிபெசன்ட் அம்மையார்
B) மேடம் பிக்காஜிகாமா
C) இராஜாராம் மோகன்ராய்
D) H.S. பிளாவட்ஸ்கி, H.S. ஆல்காட்

**136. அலிகார் இயக்கத்தை துவக்கியவர் யார்?**
A) சலிமுல்லா கான்
B) M.A. ஜின்னா
C) சர் சையது அகமதுகான்
D) சர் சையது அப்துல்லா

**137. உள்ளாட்சி அரசின் தந்தை எனப்படுபவர் யார்?**
A) ரிப்பன் பிரபு
B) லிட்டன் பிரபு
C) வில்லியம் பெண்டிங் பிரபு
D) கர்சன் பிரபு

**138. ரிப்பன் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் முழுமையான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எந்த ஆண்டு நடத்தப்பட்டது?**
A) 1885 B) 1900
C) 1881 D) 1901

**139. 1885–இல் தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸின், முதல் தலைவர் யார்?**
A) A.O. ஹியூம்
B) உமேஷ் சந்திர பானர்ஜி
C) மேடம் பிக்காஜிகாமா
D) அன்னிபெசன்ட்

**140. 1893–இல் விநாயகர் சதுர்த்தி விழாவை அறிமுகப்படுத்தி முதன்முதலாகக் கொண்டாடத் துவங்கியவர் யார்?**
A) A.O. ஹியூம் B) விவேகானந்தர்
C) பகத்சிங் D) பாலகங்காதர திலகர்

**141. இந்திய 'புரட்சி சிந்தனைகளின் தந்தை' என்றழைக்கப்பட்டவர் யார்?**
A) லாலா லஜபதிராய் B) பிபின் சந்திரபால்
C) திலகர் D) பகத்சிங்

**142. முஸ்லிம் லீக்கைத் தோற்றுவித்தவர் யார்?**
A) M.A. ஜின்னா B) ஆகாகான்
C) அலி சகோதரர்கள் D) சலிமுல்லாகான்

**143. காங்கிரஸின் மித மற்றும் தீவிரவாதிகளுக்கிடையே ஏற்பட்ட சூரத் பிளவு பின்வரும் எந்த வருடம் ஏற்பட்டது?**
A) 1905 B) 1907
C) 1906 D) 1916

129. (B) 130. (D) 131. (A) 132. (A) 133. (B) 134. (B) 135. (D) 136. (C) 137. (A) 138. (C) 139. (B) 140. (D) 141. (B) 142. (D) 143. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**144. மகாத்மா காந்தி இந்தியாவில் நடத்திய முதல் போராட்டம் எது?**
A) சாம்பரான் சத்தியாகிரகம்
B) செளரி செளரா
C) பர்டோலி சத்தியாகிரகம்
D) ஒத்துழையாமை இயக்கம்

**145. பஞ்சாபின் ஜாலியன் வாலாபாக் படுகொலை கீழ்க்கண்ட எந்த நாளில் நடைபெற்றது?**
A) தீபாவளி B) பஞ்சாப் புத்தாண்டு
C) விநாயகர் சதுர்த்தி D) ஹோலி

**146. ஒத்துழையாமை இயக்கம் எப்போது நடைபெற்றது?**
A) 1922 B) 1930
C) 1925 D) 1920

**147. 1922–இல் காவல் நிலையம் கொளுத்தப்பட்டு 22 போலீசார் உயிரிழந்த செளரிசெளரா தற்போது எங்கு அமைந்துள்ளது?**
A) குஜராத் B) பீகார்
C) மேற்குவங்கம் D) உத்திரப்பிரதேசம்

**148. 1923–இல் சுயராஜ்ஜிய கட்சி எங்கு துவக்கப்பட்டது?**
A) அலிப்பூர் சிறை B) கொல்கத்தா
C) மும்பை D) புதுடெல்லி

**149. புகழ்பெற்ற நேரு அறிக்கை – 1928 ஐ சமர்ப்பித்தவர் யார்?**
A) வி.கே. கிருஷ்ணமேனன்
B) ஜவஹர்லால் நேரு
C) மோதிலால் நேரு
D) C.R. தாஸ்

**150. இந்தியப் பிரிவினைக்கு வித்திட்டவர் யார்?**
A) முகமது அலி ஜின்னா
B) ஆகாகான்
C) நவாப் சலீமுல்லா
D) மவுண்ட் பேட்டன்

**151. 1927 ஜனவரி 26 அன்று, பூர்ண சுதந்திர தீர்மானம் நிறைவேற்றப்பட்ட லாகூர் காங்கிரஸ் மாநாட்டின் தலைவர் யார்?**
A) லாலா லஜபதிராய்
B) சர்தார் வல்லபாய் படேல்
C) ஜவஹர்லால் நேரு
D) ஆகாகான்

**152. 1930, 1931, 1932 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று வட்ட மேசை மாநாடுகளிலும் பங்குபெற்றவர் யார்?**
A) ஜவஹர்லால் நேரு B) B.R. அம்பேத்கர்
C) ஈ.வெ.ரா. D) மகாத்மா காந்தி

**153. காந்தியடிகளால் 1940–இல் அறிவிக்கப்பட்ட தனிநபர் சத்தியாகிரகத்தின் முதல் சத்தியாகிரகி யார்?**
A) நேதாஜி B) ஜவஹர்லால் நேரு
C) வல்லபாய் படேல்
D) ஆச்சார்ய வினோபா பாவே

**154. கிரிப்ஸ் தூதுக் குழு தோல்வியடைந்ததையடுத்து காந்தியடிகளால் ஏற்படுத்தப்பட்ட இயக்கம் எது?**
A) வரிகொடா இயக்கம்
B) வெள்ளையனே வெளியேறு இயக்கம்
C) தனிநபர் சத்தியாகிரகம்
D) இண்டிகோ விவசாயிகள் சங்கம்

**155. சுதந்திரத்திற்கு முன்பு கடைசியாக நடைபெற்ற மிகப்பெரிய போராட்டம் எது?**
A) வெள்ளையனே வெளியேறு போராட்டம்
B) உப்புச் சத்தியாகிரகம்
C) ஒத்துழையாமை இயக்கம்
D) தனிநபர் சத்தியாகிரகம்

**156. 1930–இல் நடத்தப்பட்ட உப்புச் சத்தியாகிரகத்தின் மறுபெயர் என்ன?**
A) சாம்பரன் சத்தியாகிரகம்
B) வெள்ளைனே வெளியேறு இயக்கம்
C) தனி நபர் சத்தியாகிரகம்
D) சட்டமறுப்பு இயக்கம்

**157. காந்தியடிகளை 'மகாத்மா' என்று முதன்முதலாக அழைத்தவர் யார்**
A) M.A. ஜின்னா B) இராஜாஜி
C) வல்லபாய் படேல் D) ஜவஹர்லால் நேரு

144. (A) 145. (B) 146. (D) 147. (D) 148. (A) 149. (C) 150. (A) 151. (C) 152. (B) 153. (D) 154. (B) 155. (A) 156. (D) 157. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**158. காந்தியடிகள் காங்கிரஸின் தலைவராகப் பதவி வகித்த ஆண்டு எது?**
A) 1919 B) 1932
C) 1924 D) 1931

**159. இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது காங்கிரஸின் தலைவர் யார்?**
A) முகமது அலி ஜின்னா B) இராஜேந்திர பிரசாத்
C) சுசேதா கிருபளானி D) ஜவஹர்லால் நேரு

**160. கீழ்க்கண்ட எந்தப் படைப்பிரிவை நேதாஜி உருவாக்கவில்லை?**
A) பாரத் படைப்பிரிவு B) நேதாஜி படைப்பிரிவு
C) நேரு படைப்பிரிவு D) காந்தி படைப்பிரிவு

**161. நேரடி நடவடிக்கை நாள், என முஸ்லிம் லீக்கினால் கொண்டாடப்பட்ட நாள் எது?**
A) 14 ஆகஸ்ட் 1946 B) 15 ஆகஸ்ட் 1946
C) 14 ஆகஸ்ட் 1947 D) 16 ஆகஸ்ட் 1946

**162. 1946–இல் நேரு தலைமையில் அமைந்த இடைக்கால அரசு பின்வரும் எந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது?**
A) அமைச்சரவைத் தூதுக்குழு
B) சைமன் குழு
C) காங்கிரஸ் தூதுக்குழு
D) மாண்டேகு–செம்ஸ்போர்டு

**163. இந்தியா–பாகிஸ்தான் பிரிவினை பின்வரும் எந்தத் திட்டத்தின் அடிப்படையில் நடைபெற்றது?**
A) மவுண்ட்பேட்டன் திட்டம்
B) வேவல் திட்டம்
C) M.A. ஜின்னா திட்டம்
D) சி.ஆர். திட்டம்

**164. இந்தியா–பாகிஸ்தான் எல்லையை பிரிக்க ராட்–கிளிப் எல்லைக் கமிஷன் எப்போது அமைக்கப்பட்டது?**
A) 1946 B) 1948
C) 1947
D) மேற்கண்ட எதுவுமில்லை

**165. இந்திய சுதந்திரச் சட்டம் எப்போது இங்கிலாந்து நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது?**
A) 15 ஜூலை 1946 B) 18 ஜூலை 1947
C) 15 ஜூலை 1947 D) 14 ஆகஸ்ட் 1947

## இந்திய அச்சுக் கலையின் வரலாறு

**1. இந்தியாவின் முதல் அச்சுக்கூடத்தை நிறுவியவர்கள் யார்?**
A) டேனியர்கள் B) போர்ச்சுகீசியர்
C) பிரஞ்சுகாரர்கள் D) ஆங்கிலேயர்கள்

**2. இந்தியாவின் முதல் செய்திதாள் மற்றும் அதை வெளியிட்டவர் யார்?**
A) மெட்ராஸ் மெயில், ஜேம்ஸ் அகஸ்டஸ் கிக்கி
B) பெங்கால் கெசட், கேசப் சந்திரசென்
C) இந்தியா டுடே, சுப்ரமணியம் ஐயர்
D) மெட்ராஸ் கூரியர்ஸ், சர் அயர் கூட்

**3. 1784–இல் வெளியிடப்பட்ட மதராஸ் மாகாணத்தின் முதல் செய்தித்தாள் எது?**
A) மெட்ராஸ் கூரியர் B) மெட்ராஸ் மெயில்
C) தி இந்து D) சுதேசமித்ரன்

**4. இந்தியாவின் முதல் மாலை நேர பத்திரிகை மற்றும் வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?**
A) 1875, சுதேசமித்ரன்
B) 1896, ஈவ்னிங் இந்தியா
C) 1880, இந்து
D) 1868, மெட்ராஸ் மெயில்

158. (C) 159. (B) 160. (A) 161. (D) 162. (A) 163. (A) 164. (C) 165. (B) ★★★
1. (B) 2. (B) 3. (A) 4. (D)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

5. **இந்தியன் ஹெரால்ட் எனும் ஆங்கில செய்தித்–தாளை 1795–இல் வெளியிட்டவர் யார்?**
A) ஆர். வில்லியம் மற்றும் ஹம்பரீஸ்
B) ஜேம்ஸ் அகஸ்டஸ்கிக்கி
C) தாதாபாய் நௌரோஜி
D) ஜவஹர்லால் நேரு

6. **இந்தியாவின் முதல் பாரசீக இதழான 'மீரத்–துள்–அக்பர்'–ஐ வெளியிட்டவர் யார்?**
A) அல்பரூனி
B) ராஜாராம் மோகன்ராய்
C) சர் சையது அகமதுகான்
D) நவாப் சலீமுல்லாகான்

7. **'தாதாபாய் நௌரோஜி'யினால் குஜராத்தி மொழியில் வெளியிடப்பட்ட இதழ் எது?**
A) இந்தியன் மிர்ரர் B) தீன் குஜராத்தி
C) இந்தியன் ஹெரால்ட்
D) ரஸ்ட் கோப் தார்

8. **'இந்தியன் மிர்ரர்' எனும் இதழை தேவேந்திர நாத் தாகூர் எங்கிருந்து வெளியிட்டார்?**
A) அலகாபாத் B) கல்கத்தா
C) மும்பை D) லக்னோ

9. **'சுதேசமித்ரன்' எனும் செய்தித்தாள் பின்வரும் எந்த மொழியில் வெளியிடப்பட்டது?**
A) தமிழ் B) மராத்தி
C) ஆங்கிலம் D) வங்கம்

10. **சுதேசமித்ரன் எனும் செய்தித்தாளை வெளியிட்டவர் யார்?**
A) வ.உ.சி. B) பாரதி
C) ஜி. சுப்பிரமணிய அய்யர்
D) திலகர்

11. **பாரீஸிலிருந்து வெளியிடப்பட்ட வந்தே மாதரம் எனும் இதழை வெளியிட்டவர் யார்?**
A) அன்னிபெசண்ட் B) H.S. பிளாவட்ஸ்கி, H.S. ஆல்காட்
C) மேடம் பிக்காஜி காமா D) தாதாபாய்நௌரோஜி

12. **'குடியரசு' எனும் இதழை வெளியிட்டவர் யார்?**
A) ஈ.வெ.ரா. B) அம்பேத்கர்
C) பாரதிதாசன் D) இராஜாஜி

13. **அம்பேத்கர் அவர்களால் வெளியிடப்பட்ட இதழ் எது?**
A) சுதேசமித்ரன் B) பகிஸ்கரி பாரத்
C) புத்தமித்ரா D) குடியரசு

14. **'இந்து' எனும் பத்திரிகை ஜி. சுப்ரமணிய அய்யரால் வெளியிடப்பட்ட ஆண்டு எது?**
A) 1901 B) 1875
C) 1900 D) 1878

15. **1861–இல் துவங்கப்பட்ட 'பம்பாய் டைம்ஸின்' தற்போதைய பெயர் என்ன?**
A) பம்பாய் சமச்சார் B) இந்தியா டுடே
C) டைம்ஸ் ஆப் இந்தியா D) மும்பை டுடே

# இந்திய அரசியலமைப்பு

1. **இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டத்தில் தற்காலிகத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர்**
A) சச்சிதானந்த சின்ஹா
B) இராஜேந்திரபிரசாத்
C) G.V. மவ்லாங்கர்
D) ஜவஹர்லால் நேரு

2. **1946, நவம்பர் மாதம் அமைக்கப்பட்ட இந்திய அரசியல் நிர்ணய சபை, பின்வரும் எந்த தூதுக்குழுவின் திட்டப்படி அமைக்கப்பட்டது?**
A) கிரிப்ஸ் தூதுக்குழு
B) அமைச்சரவைத் தூதுக்குழு
C) சைமன் தூதுக்குழு
D) மாண்டேகு–செம்ஸ்போர்டு தூதுக்குழு

5. (A) 6. (B) 7. (D) 8. (B) 9. (A) 10. (C) 11. (C) 12. (A) 13. (B) 14. (D)
15. (C) ★★★ 1. (A) 2. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

3. அரசியலமைப்பு நிர்ணய சபையின் உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டனர்?
A) விகிதப் பிரதிநிதித்துவ தேர்தல் மூலம்
B) நியமனம் மூலம்
C) ஆங்கிலோ இந்தியப் பகுதிகளில் தெரிவு (A)–வின் படியும், மன்னராட்சிப் பகுதிகளில் தெரிவு (B)–வின் படியும்
D) ஒட்டுமொத்தமாக தெரிவு(அ)–வின் படி

4. பின்வருவனவற்றுள் டிசம்பர் 9, 1946–இல் நடைபெற்ற முதல் அரசியலமைப்பு நிர்ணய சபைக் கூட்டத்தை புறக்கணித்த கட்சி எது?
A) பார்வார்டு பிளாக்
B) சுயராஜ்ஜிய கட்சி
C) முஸ்லிம் லீக்
D) சிரோன்மணி அகாலிதளம்

5. 'உங்களுக்கான அரசியலமைப்புச் சட்டத்தை உங்களாலேயே உருவாக்க முடியுமா' என இந்தியர்களுக்கு சவால் விட்ட ஆங்கிலேயர் யார்?
A) பிரிக்கென் பிரபு B) கர்சன் பிரபு
C) க்ளெமெண்ட் அட்லி D) வின்ஸ்டன் சர்ச்சில்

6. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர்
A) சச்சிதானந்த சின்ஹா
B) H.C. முகர்ஜி
C) G.V. மவ்லாங்கர்
D) ஜவஹர்லால் நேரு

7. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் சட்ட ஆலோசகர் யார்?
A) B.R. அம்பேத்கர் B) விஸ்வேசுவரய்யா
C) M.N. ராய் D) மவுண்ட்பேட்டன்

8. இந்திய அரசியலமைப்புச் சட்ட முகவுரையின் அடிப்படையான குறிக்கோள் தீர்மானம், டிசம்பர் 13, 1946–இல் கீழ்க்கண்ட யாரால் கொண்டு–வரப்பட்டது?
A) ஜவஹர்லால் நேரு B) B.R. அம்பேத்கர்
C) M.N. ராய் D) இராஜேந்திர பிரசாத்

9. இந்திய அரசியல் நிர்ணய சபையே சுதந்திர இந்தியாவின் முதல் பாராளுமன்றமாகவும் செயல்பட்டது. அதன் தலைவராகத் திகழ்ந்தவர் யார்?
A) இராஜேந்திர பிரசாத் B) G.V. மவ்லாங்கர்
C) H.C. முகர்ஜி D) B.R. அம்பேத்கர்

10. B.R. அம்பேத்கர் தலைவராகத் திகழ்ந்த இந்திய அரசியலமைப்பு வரைவுக்குழு எந்த ஆண்டு அமைக்கப்பட்டது?
A) 1946 B) 1947
C) 1948 D) 1949

11. இந்திய தேசியக் கொடி அரசியலமைப்பு நிர்ணய சபையால் எப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டது?
A) ஜூலை 22, 1947 B) ஜனவரி 24, 1950
C) ஆகஸ்ட் 15, 1947 D) ஜனவரி 26, 1956

12. 2 ஆண்டுகள் 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் செயல்பட்ட அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் எத்தனை முறை கூடியது?
A) 10 B) 64
C) 11 D) 65

13. அரசியல் நிர்ணய சபையின் நற்சாட்சிக் குழுவின் – (Credential) தலைவர் யார்?
A) அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்
B) இராஜேந்திர பிரசாத்
C) அனுக்ரஹ நாராயண் சின்ஹா
D) K.M. முன்ஷி

14. அரசியலமைப்பு நிர்ணய சபையின் பின்வரும் எந்தக் குழுவிற்கு/ குழுக்களுக்கு ஜவஹர்லால் நேரு தலைமை வகித்தார்?
A) மாநிலங்கள் குழு, மத்திய அதிகாரங்கள் குழு, மத்திய அரசியலமைப்பு குழு
B) அடிப்படை உரிமைகள் குழு, மத்திய அதிகாரங்கள் குழு, மத்திய அரசியலமைப்பு குழு
C) சிறுபான்மையினர் குழு, மத்திய அதிகாரங்கள் குழு, மத்திய அரசியலமைப்பு குழு
D) அலுவல் குழு, மத்திய அதிகாரங்கள் குழு, மத்திய அரசியலமைப்பு குழு

3. (C) 4. (C) 5. (A) 6. (B) 7. (C) 8. (A) 9. (B) 10. (B) 11. (A) 12. (C) 13. (A) 14. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**15. நாடாளுமன்ற அரசு, ஒற்றைக் குடியுரிமை, கேபினெட் முறை, ஈரங்க சட்டசபை போன்றவை பின்வரும் எந்த நாட்டின் அரசியலமைப்பு முறையிலிருந்து பெறப்பட்டது?**

A) அமெரிக்கா B) அயர்லாந்து

C) கனடா D) இங்கிலாந்து

**16. இந்திய அரசியலமைப்பு சாசனப் பிரிவு 356–இன் படி, மத்திய அரசு பெறும் சிறப்பு அதிகாரம் யாது?**

A) மாநில அரசுகளை கலைக்கும் அதிகாரம்

B) தேசிய நெருக்கடியை அமலாக்கும் அதிகாரம்

C) பொருளாதார நெருக்கடியை அமலாக்கும் அதிகாரம்

D) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கும் அதிகாரம்

**17. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பகுதி–I (பிரிவு 1 முதல் 4 வரை) பின்வரும் எதனை வரையறுக்கிறது?**

A) குடியுரிமை

B) ஒன்றியம் (நாடு) மற்றும் அதன் ஆட்சி எல்லை

C) அடிப்படை உரிமைகள்

D) அடிப்படைக் கடமைகள்

**18. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணை பின்வரும் எதைப் பற்றியது?**

A) பதவிப் பிரமாண உறுதிமொழிகள்

B) ஊதியம்

C) சிறப்புப் பகுதிகள்

D) ஆட்சிமொழிகள்

**19. 1985–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 42–ஆவது அரசியல் சட்டதிருத்தம் மூலம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்ட 10–ஆவது அட்டவணை எதைப்பற்றியது?**

A) கட்சித்தாவல் தடைச்சட்டம்

B) ஆட்சிமொழிகள்

C) ஊராட்சி அமைப்புகள்

D) நகராட்சி அமைப்புகள்

**20. பின்வருவனவற்றுள் மொழிவாரி மாநிலங்கள் அமைப்பது குறித்து ஆராய 1948–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட முதல் குழு எது?**

A) J.V.P. குழு

B) S.K. தார்குழு

C) பசல் அலி குழு

D) டி.டி. கிருஷ்ணமாச்சாரி குழு

**21. பின்வருவனவற்றுள் மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956–இன்படி, பிரிக்கப்படாத இந்திய மாநிலம் எது?**

A) குஜராத் B) ஆந்திரப்பிரதேசம்

C) பீகார் D) ஹரியானா

**22. பின்வரும் எந்த ஒன்றின் மூலம் இந்தியக் குடியுரிமையைப் பெற இயலாது?**

A) மரபு வழி

B) வேண்டுகோள் மூலம்

C) புதிய நிலப் பகுதிகள் இணைப்பு

D) வேலைவாய்ப்பு

**23. இந்திய அரசியலமைப்பின் மகா சாசனம் (Magna Carta of India) எனப்படுவது**

A) பகுதி – III B) பகுதி – IV

C) பகுதி – I D) பகுதி – X

**24. அரசியலமைப்பு வழங்கியுள்ள சுதந்திர உரிமை (பிரிவு 19) பின்வரும் எந்த சூழ்நிலையில் செயலிழக்கும்?**

A) தேசிய நெருக்கடி நிலை

B) இயற்கைப் பேரிடர்களின் போது

C) பொருளாதார நெருக்கடி நிலை

D) இது எப்போதும் செயலிழக்காது

**25. 1976–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'ஸ்வரண் சிங்' தலைமையிலான கமிட்டி எதைப் பற்றியதாகும்?**

A) அடிப்படை உரிமைகள்

B) அடிப்படைக் கடமைகள்

C) நெறிமுறைக் கோட்பாடுகள்

D) A மற்றும் B

15. (D) 16. (A) 17. (B) 18. (A) 19. (A) 20. (B) 21. (B) 22. (D) 23. (A) 24. (A) 25. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**26. இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 123, இந்தியக் குடியரசுத் தலைவருக்கு பின்வரும் எந்தவொரு அதிகாரத்தை வழங்குகிறது?**

**A)** நெருக்கடி நிலை
**B)** அவசரகாலச் சட்டம்
**C)** மன்னிக்கும் அதிகாரம்
**D)** இராணுவ அதிகாரம்

**27. அரசியலமைப்புச் சாசனத்தின் பகுதி 4–இல் ஷரத்து 36 முதல் 51 வரை இடம் பெற்றுள்ள அரசுக் கொள்கைகளை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் எந்த நாட்டின் அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டது?**

**A)** இங்கிலாந்து **B)** அயர்லாந்து
**C)** ஆஸ்திரேலியா **D)** இரஷ்யா

**28. மதச்சார்பின்மை (Secularism) என்றால் என்ன?**

**A)** ஒரு மாநிலத்திற்கு ஒரு குறிப்பிட்ட மதம்
**B)** எல்லா மதங்களுக்கும் சம உரிமை அளித்தல்
**C)** மதம் கிடையாது
**D)** இந்து மதம்

**29. எல்லோருக்கும் வேலைவாய்ப்பு என்னும் கொள்கை எந்த உரிமைகளின் கீழ் அமைகிறது?**

**A)** மக்களது அடிப்படை உரிமைகள்
**B)** சமூக, பொருளாதார உரிமைகள்
**C)** மேற்குறிப்பிட்ட இரண்டுமே கிடையாது
**D)** மேற்குறிப்பிட்ட இரண்டுமே

**30. நமது அரசியல் சட்டத்தின் முகவுரை (Preamble) வலியுறுத்துவது யாது?**

**A)** மதச்சார்புள்ள நாடாக (Theocratic State) இயங்குவது
**B)** இறையாண்மை மிக்க வாய்ந்த சமுதாய நலம் பேணும் மதச் சார்பற்ற குடியரசு நாடாக இயங்குவது
**C)** மதச் சார்பற்ற குடியரசு நாடாக இயங்குவது
**D)** குடியரசு நாடாக இயங்குவது

**31. பின்வருவனவற்றுள் அரசு நெறிமுறைக் கோட்பாட்டிற்குள் (Directive Principles of State Policy) இல்லாதது எது?**

**A)** ஆண், பெண் இருபாலாருக்கும் சம வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்புக்கேற்ற சம ஊதியம் வழங்கல்
**B)** மதுவிலக்கைத் தீவிரப்படுத்துதல்
**C)** விபச்சாரத்தை ஒழித்தல்
**D)** உலக நாடுகளுக்கிடையே அமைதியை நிலைநாட்டல்

**32. அடிப்படைக் கடமைகளைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளை ஆராய்க.**

1) இது அரசியலமைப்பின் உருவாக்கத்தின் போது வரையறுக்கப்படவில்லை. 1976–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஸ்வரண்சிங் கமிட்டியின் பரிந்துரையின் படி அரசியலமைப்பு சட்டத்தில் சேர்க்கப்பட்டது.
2) தற்போது அடிப்படைக் கடமைகளின் மொத்த எண்ணிக்கை – 11
3) இக்கடமைகள் இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே பொருந்தும். இந்தியாவில் உள்ள அயல் நாட்டவருக்கு பொருந்தாது.
4) அரசியலமைப்பிற்கு கீழ்ப்படிதல், பொதுத்தேர்தல்களில் வாக்களித்தல், பொதுச் சொத்தை பாதுகாத்தல் போன்றவை அடிப்படைக் கடமைகளில் சில.

**சரியான விடையளி:**

**A)** அனைத்தும் சரி **B)** 1, 2, 4 மட்டும் சரி
**C)** 1, 2, 3, மட்டும் சரி **D)** 1, 3, 4, மட்டும் சரி

**33. அரசியலமைப்புச் சட்டம் பகுதி–IV, ஷரத்து 36–51 வரை குறிப்பிடப்பட்டிருக்கும் நெறிமுறைக் கோட்பாடுகளைப் பற்றிய பின்வரும் கருத்துகளில் எது தவறு?**

**A)** இது நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மக்களாட்சி கோட்பாட்டை நிலை நிறுத்துகிறது.
**B)** இவற்றை நீதிமன்றங்கள் மூலம் நிலை நாட்டமுடியாது.
**C)** இவற்றை செயல்படுத்த தனியாக சட்டங்கள் தேவையில்லை ஏனெனில் இவை தன்னிச்சையாகவே செயல்படும்.
**D)** அரசாங்கத்தின் அனைத்து கொள்கைகளும் சட்டங்களும் இதன் இலட்சியத்தை பூர்த்தி செய்யும் வண்ணம் இருக்க வேண்டும்.

26. (B) 27. (B) 28. (B) 29. (B) 30. (B) 31. (C) 32. (C) 33. (C)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**34. கீழ்க்காண்பவற்றில் இந்திய அரசுச் சட்டம் – 1935லிருந்து இந்திய அரசியலமைப்பு சாசனத்திற்கு பெறப்பட்ட அம்சங்கள் யாவை?**

A) கூட்டரசு முறை, ஆளுநர் அலுவல், நீதித்துறை, அவசர காலத் திட்டங்கள், பொதுத்தேர்வு ஆணையங்கள்

B) நாடாளுமன்ற கூட்டமர்வு முறை, பொதுப்பட்டியல் குடியரசுத் தலைவர் தேர்தல் முறை

C) கேபினெட் முறை, தனியுரிமை நீதிப்பேராணை, ஈரங்க சட்டசபை.

D) இந்திய அரசுச் சட்டம் – 1935–லிருந்து எந்த அம்சமும் பெறப்படவில்லை.

**35. மத்திய–மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பகிர்வு பின்வரும் எந்த ஒன்றிலிருந்து பெறப்பட்டது?**

A) மிண்டோ–மார்லி சீர்திருத்தம் – 1909

B) மாண்டேகு – செம்ஸ்போர்டு சட்டம் – 1919

C) இந்திய அரசுச் சட்டம் – 1935

D) இந்திய அரசுச் சட்டம் – 1858

**36. ஜனவரி 26, 1950 அன்று இந்திய அரசியலமைப்பு சாசனம் பின்வரும் எதனால் / எவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது?**

A) பாராளுமன்றம்

B) இந்தியக் குடிமக்கள்

C) அரசியலமைப்பு நிர்ணயக்குழு

D) இந்திய அரசு

**37. பின்வரும் எந்தக் கட்சிகள் அம்பேத்கரால் தோற்றுவிக்கப்பட்டன?**

**1) விவசாயிகள் மற்றும் உழைப்பாளர் கட்சி (இந்திய)**

**2) அனைத்திந்தியப் பட்டியல் இனத்தவர் கூட்டமைப்பு**

**3) சுதந்திர தொழிலாளர் கட்சி**

**சரியான விடையளி :**

A) 1 மற்றும் 2 மட்டும்

B) 2 மற்றும் 3 மட்டும்

C) 1 மற்றும் 3 மட்டும்

D) 1, 2, 3

**38. அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள பொருளாதார நீதி (Economic Justice) எனும் கருத்தானது இந்திய அரசியலமைப்பில் பின்வரும் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?**

A) முகப்புரை மற்றும் அடிப்படை உரிமைகள்

B) முகப்புரை மற்றும் வழிகாட்டும் நெறிமுறைகள்

C) அடிப்படை உரிமைகள் வழிகாட்டும் நெறிமுறைகள்

D) மேற்கண்ட எதுவுமல்ல

**39. அரசியலமைப்புச் சட்டப்படி பின்வருவனவற்றில் அரசு நிர்வாகத்தில் அடிப்படையானவை எவை?**

A) அடிப்படைக் கடமைகள்

B) அடிப்படை உரிமைகள்

C) வழிகாட்டும் நெறிமுறைகள்

D) (A) மற்றும் (B)

**40. டாக்டர் அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என்று வர்ணிக்கப்பட்டது எது?**

A) சமத்துவ உரிமை

B) தீண்டாமைக்கெதிரான உரிமை

C) அரசியலமைப்பின்படி தீர்வு

D) அரசியலமைப்பின் முகப்புரை

**41. அரசிலமைப்பு சாசனத்தின் பகுதி–1 (Part-I)இன் படி இந்தியா எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?**

A) இந்தியா அதாவது பாரதமானது பல்வேறு மாநிலங்களடங்கிய ஒன்றியம்

B) இந்தியா அதாவது பாரதமானது 29 மாநிலங்களையும் 7 யூனியன் பிரதேசங்களையும் உள்ளடக்கியது.

C) இந்தியா அதாவது பாரதமானது ஓர் இறையாண்மை பொருந்திய மதச்சார்பற்ற சமதர்ம ஜனநாயக நாடு

D) (A) மற்றும் (B)

34. (A) 35. (C) 36. (B) 37. (B) 38. (B) 39. (D) 40. (C) 41. (D)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**42. தவறான இணையைத் தேர்ந்தெடு.**

1) Mandamus – செயலுறுத்தும் நீதிப்பேராணை

2) Certiorari – நெறியுறுத்தும் நீதிப்பேராணை

3) Prohibition – தடையுறுத்தும் நீதிப்பேராணை

4) Quo Warranto – ஆட்கொணர்வு நீதிப்பேராணை

**சரியான விடையளி :**

**A)** 1 **B)** 2

**C)** 3 **D)** 4

**43. இந்திய அரசியல் சாசனத்தின் ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய–மாநில அரசுகளுக்கிடையிலான அதிகாரப் பகிர்வின்படி தற்போது,**

1) மத்தியப் பட்டியலில் – 100 துறைகள்

2) மாநிலப் பட்டியலில் – 62 துறைகள்

3) பொதுப்பட்டியலில் – 52 துறைகள் உள்ளன.

**சரியான விடையளி :**

**A)** 1, 3 சரி **B)** 2, 3 சரி

**C)** 1, 2, 3 சரி **D)** அனைத்தும் தவறு

**44. பின்வரும் எந்த ஒன்று இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறு அல்ல?**

1) பல்வேறு மூலங்களிலிருந்து பெறப்பட்ட உலகின் நீண்ட, எழுதப்பட்ட அரசியலமைப்பு

2) நெகிழும் மற்றும் நெகிழாத் தன்மை

3) நாடாளுமன்ற இறையாண்மை, ஒருங்கிணைந்த நீதித்துறை

4) குடியரசுத் தலைவர் தலைமையிலான அரசு

**சரியான விடையளி :**

**A)** 3 **B)** 4

**C)** 1 **D)** 2

**45. 86–ஆவது சட்டத்திருத்தம் வாயிலாக 2002–ஆம் ஆண்டு புதிதாக சேர்க்கப்பட்ட அம்சம் எது?**

**A)** இயற்கைச் சூழலையும் உயிரினங்களையும் பாதுகாத்தல்

**B)** பெண்களின் கண்ணியத்தை காத்தல்

**C)** நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபடல்

**D)** 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்பை உருவாக்குதல்.

**46. இந்திய அரசியலமைப்பின் படி கூட்டாட்சி முறையில் இந்தியா பின்வரும் எந்த நாட்டை பின்பற்றுகிறது?**

**A)** அமெரிக்க ஐக்கிய நாடுகள்

**B)** கனடா

**C)** இங்கிலாந்து **D)** இரஷ்யா

**47. இந்திய அரசியலமைப்பு சாசனம் பகுதி–I (பிரிவு–3)–இன் படி ஒரு மாநிலத்தின் எல்லையை மாற்றியமைக்கும் அதிகாரம் பின்வரும் யாருக்கு உண்டு?**

**A)** குடியரசுத் தலைவர் & ஆளுநர்

**B)** மாநில முதல்வர்

**C)** பிரதமர் & குடியரசுத் தலைவர்

**D)** நாடாளுமன்றம்

**48. அரசியலமைப்பு சாசனத்தின்படி பின்வருவனவற்றுள் எது தவறு?**

**A)** அமைதி காலங்களில் கூட்டாட்சி தத்துவம், நெருக்கடி காலங்களில் ஒற்றையாட்சி தத்துவம்

**B)** உச்சநீதிமன்றத்தின் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட நீதித்துறை

**C)** மத்திய அரசை கலைக்கும் அதிகாரம், ஷரத்து 356–இன்படி மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**D)** அரசியல் சாசனத்தை மாற்றம் செய்யும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்படாமை.

42. (D) 43. (C) 44. (B) 45. (D) 46. (B) 47. (D) 48. (C)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**49. பிரவேசி பாரதீய திவாஸ் திட்டம் பற்றிய பின்வரும் கருத்துகளில் எது/எவை தவறு?**

A) இத்திட்டம் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு (NRI) தற்காலிகக் குடியுரிமையை வழங்குகிறது.

B) இது இந்தியக் குடியுரிமை சட்டம் – 2003–இன் படி கொண்டுவரப்பட்டது.

C) இத்திட்டம் பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்திற்கு பொருந்தாது

D) இதன் மூலம் வெளிநாடு வாழ் இந்தியர்கள் இந்திய அரசுப்பணிகளில் சேரலாம். தேர்தல்களில் வாக்களிக்கலாம், நிரந்தரமாக இந்தியாவில் தங்கலாம்.

**50. அரசியலமைப்புச் சாசனத்தின் ஆறாவது அட்டவணை பின்வரும் எந்த மாநிலங்களில் செல்லும்?**

A) அஸ்ஸாம், நாகாலாந்து, திரிபுரா,

B) அஸ்ஸாம், மேகாலாயா, திரிபுரா, மிசோரம்

C) அஸ்ஸாம், நாகாந்து, திரிபுரா, மிசோரம்

D) A மட்டும் B மட்டும்

**51. 14 வயதிற்குட்பட்டோருக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி என்பது இந்திய அரசியலமைப்பில் பின்வரும் எந்தப் பகுதியின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது?**

A) அடிப்படை உரிமைகள்

B) அடிப்படைக் கடமைகள்

C) நெறிமுறைக் கோட்பாடுகள்

D) இலவச மற்றும் கட்டாயக் கல்வி என்பது அரசியலமைப்பில் வலியுறுத்தப்படவில்லை

**52. பின்வருபவர்களுள், ஜனவரி 26, 1950–இல் நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் நகலைத் தயாரித்தவர் யார்?**

A) பி.ஆர். அம்பேத்கர்

B) இராஜகோபாலச்சாரியார்

C) ஜவஹர்லால் நேரு

D) விஜயராகவாச்சாரியார்

**53. பின்வரும் எந்த அம்சம் இந்திய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பிருந்தே செயல்பாட்டிலிருந்து வந்தது?**

A) அடிப்படை உரிமைகள்

B) குடியுரிமை

C) அடிப்படைக் கடமைகள்

D) வயது வந்தோருக்கு வாக்குரிமை

**54. இந்திய அரசியலமைப்பின் படி பின்வரும் எந்த அடிப்படை உரிமை குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரானது?**

A) சமத்துவ உரிமை

B) சுதந்திர உரிமை

C) கல்வி உரிமை

D) சுரண்டலுக்கெதிரான உரிமை

**55. கூற்று (A)** : 2014–ஆம் ஆண்டு 29–ஆவது மாநிலமாக உருவாக்கப்பட்ட தெலுங்கானா 96–ஆவது அரசியல் சாசன திருத்தம் மூலம் உருவாக்கப்பட்டது.

**காரணம் (R)** : புதிய மாநில உருவாக்கம் என்பது அரசியல் சாசனத்தில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படும் ஒன்று

**சரியான விடையளி :**

A) கூற்று (A)–விற்கு காரணம் (R) பொருத்தமானது.

B) கூற்று (A)–விற்கு காரணம் (R) பொருத்தமானதல்ல.

C) கூற்று (A) மட்டும் சரி.

D) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் தவறு.

49. (D) 50. (B) 51. (A) 52. (D) 53. (B) 54. (D) 55. (D)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**56. இந்தியக் குடியுரிமைச் சட்டம் – 1955 காமன்வெல்த் குடியுரிமையையும் தன்னுள் கொண்டிருந்தது. இது பின்வரும் எந்தச் சட்டம் மூலம் நீக்கப்பட்டது?**

**A)** குடியுரிமை திருத்தச் சட்டம் – 1986
**B)** குடியுரிமை திருத்தச் சட்டம் – 1992
**C)** குடியுரிமை திருத்தச் சட்டம் – 2003
**D)** குடியுரிமை திருத்தச் சட்டம் – 2005

**57. அடிப்படை உரிமைகள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரி?**

I. இவற்றின் மீது போதுமான கட்டுப்பாடுகளை விதிக்க அரசுக்கு அதிகாரம் உண்டு
II. இவை அரசின் தன்னிச்சையான நடவடிக்கைக்கு எதிரானவை
III. உச்சநீதிமன்றம் இவற்றை பாதுகாப்பதுடன் இவற்றிற்கு உத்திரவாதம் வழங்குகின்றது.
IV. இவை புனிதமானதோ அல்லது நிரந்தரமானதோ அன்று.

**சரியான விடையளி :**

**A)** அனைத்தும் தவறு **B)** அனைத்தும் சரி
**C)** II மற்றும் III சரி **D)** I, II மற்றும் III சரி

**58. இந்திய அரசியலமைப்பு சட்டப்படி 22 மொழிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை பின்வரும் எந்த அட்டவணையின் கீழ் வரும்?**

**A)** ஆறாவது **B)** மூன்றாவது
**C)** எட்டாவது **D)** முதலாவது

**59. 1976–ஆம் ஆண்டு 42–ஆவது அரசியலமைப்பு சட்ட திருத்தம் மூலம் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் சேர்க்கப்பட்ட சொற்கள்.**

**A)** இறையாண்மை (Sovereign) சமதர்மம் (Socialist)
**B)** மக்களாட்சி (Democratic) ஒருமைப்பாடு (Unity)
**C)** மதச்சார்பின்மை (Secular) சமதர்மம் (Socialist)
**D)** சகோதரத்துவம் (Fraternity) சமத்துவம் (Equality)

**60. 1973–ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற முகப்புரை இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதியே எனத் தீர்ப்பளித்தது. பின்வருவனவற்றில் இத்தீர்ப்புக்கான வழக்கு எது?**

**A)** பெருபாரி வழக்கு
**B)** கேசவானந்த பாரதி வழக்கு
**C)** கோலக்நாத் வழக்கு
**D)** எல்.ஐ.சி. வழக்கு

**61. இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் ஜெர்மன் அரசியலமைப்பு முறையிலிருந்து பெறப்பட்ட அம்சம் எது?**

**A)** நெருக்கடி காலத்தில் அடிப்படை உரிமைகளைத் தடைசெய்தல்
**B)** அரசியலமைப்பு சட்டதிருத்தம்
**C)** சமத்துவம், சகோதரத்துவம், குடியரசு, சுதந்திரக்குறிக்கோள்
**D)** அடிப்படைக் கடமைகள்

**62. அரசியலமைப்புச் சட்டப்படி பின்வருவனவற்றில் மாநில அரசுகள் பெறாத அதிகாரம் எது?**

**A)** அரசியலமைப்பு சாசனத்தை திருத்தும் உரிமை
**B)** சட்டசபையைக் கூட்டும் உரிமை
**C)** சட்ட இயற்றும் உரிமை
**D)** நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் உரிமை

**63. நெருக்கடி நிலை குறித்த சட்ட வரைமுறைகளை விளக்கும் அரசியலமைப்பின் பகுதி எது?**

**A)** 18 **B)** 17
**C)** 16 **D)** 15

**64. இந்திய அரசியலமைப்பின் முதல் சட்ட திருத்தம் 1951–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இது பின்வரும் எதற்கானது?**

**A)** 9–ஆவது அட்டவணை இணைப்பு
**B)** குடியரசுத் தலைவர் தேர்தல்
**C)** பிரதமர் தேர்வு
**D)** மேற்கண்ட எதுவுமில்லை

**65. சுதந்திர இந்தியாவில் 1953–ஆம் ஆண்டு பிரிக்கப்பட்ட முதல் மொழிவாரி மாநிலம் எது?**

**A)** குஜராத் **B)** பீகார்
**C)** ஆந்திரப் பிரதேசம் **D)** கேரளா

56. (C) 57. (B) 58. (C) 59. (C) 60. (B) 61. (A) 62. (A) 63. (A) 64. (A) 65. (C)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**66. 1953 –ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பசல் அலி குழு பின்வரும் எந்த சட்டத்துடன் தொடர்புடையது?**
A) மொழிவாரி மாநில சட்டம் – 1953
B) மாநில மறுசீரமைப்பு சட்டம் – 1956
C) மாகாண இணைப்பு சட்டம் – 1947
D) (A) மற்றும் (C)

**67. மாநில மறுசீரமைப்பு சட்டம் 1956–இன்படி பிரிக்கப்பட்ட முதல் இந்திய மாநிலம் எது?**
A) கேரளம் B) ஆந்திரப்பிரதேசம்
C) பீகார் D) ஹரியானா

**68. பின்வருவனவற்றுள் இந்திய அரசியலமைப்புப்படி அடிப்படை உரிமை அல்லாதது எது?**
A) சமத்துவ உரிமை
B) சுதந்திர உரிமை
C) சுரண்டலுக்கெதிரான உரிமை
D) சொத்துரிமை

**69. 1952–இல் அமைக்கப்பட்ட முதலாவது பிற்படுத்–தப்பட்டோர் ஆணையம் கீழ்க்கண்ட யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?**
A) B.P. மண்டல் B) B.R. அம்பேத்கர்
C) காகா கலேல்கர் D) விஜயராகவாச்சாரி

**70. 1979–இல் அமைக்கப்பட்ட இரண்டாவது பிற்படுத்–தப்பட்டோர் ஆணையம் கீழ்க்கண்ட யாருடைய ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டது?**
A) இந்திராகாந்தி B) மொரார்ஜி தேசாய்
C) சரண்சிங் D) V.P. சிங்

**71. இந்தியாவில் முதன்முறையாக 1959–ஆம் ஆண்டு பின்வரும் எந்த மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டது?**
A) பஞ்சாப் B) கேரளா
C) உத்திரப்பிரதேசம் D) நாகாலாந்து

**72. பின்வரும் எந்த மாநிலத்தில் அதிகமுறை (9) குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டுள்ளது?**
A) பஞ்சாப் B) கேரளா
C) மேற்கு வங்காளம் D) நாகாலாந்து

**73. இந்திய அரசியலமைப்பு இந்தியக் குடியரசுத் தலைவருக்கு பின்வரும் எந்தவொரு அதிகாரத்தை வழங்கவில்லை?**
A) நெருக்கடி நிலை
B) அவசரகாலச் சட்டம்
C) மரண தண்டனை விதிக்கும் அதிகாரம்
D) இராணுவ அதிகாரம்

**74. இந்திய குடியரசுத் தலைவர்களில் மிக அதிக அளவு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர் யார்?**
A) N. சஞ்சீவ ரெட்டி B) இராதாகிருஷ்ணன்
C) இராஜேந்திர பிரசாத் D) A.P.J. அப்துல்கலாம்

**75. துணைக் குடியரசுத் தலைவரை பின்வரும் எவர் தேர்ந்தெடுப்பர்?**
A) பாராளுமன்ற உறுப்பினர்கள்
B) மாநிலசட்டமன்ற உறுப்பினர்கள்
C) யூனியன் பிரதேச சட்டமன்ற உறுப்பினர்கள்
D) தெரிவு (A), (B), (C) – மூன்றும்

**76. பின்வருபவர்களுள் இந்தியாவின் முதல் மக்களவைத் தலைவர் யார்?**
A) பல்ராம் ஜாகர் B) G.V. மவ்லாங்கர்
C) P.A. சங்மா D) சோம்நாத் சாட்டர்ஜி

**77. அரசியலமைப்புப்படி பின்வருவனவற்றுள் எது பாராளுமன்றத்தின் அங்கம் அல்ல?**
A) மக்களவை B) மாநிலங்களவை
C) குடியரசுத் தலைவர் D) அமைச்சரவைக் குழு

**78. அரசியலமைப்பு சட்டத்தின்படி இராஜ்ஜிய சபாவிற்கு அனுமதியளிக்கப்பட்ட அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?**
A) 245 B) 250
C) 545 D) 552

**79. குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 331–இன் படி மக்களவைக்கு பின்வரும் எந்த தெரிவுகளிலிருந்து இரு உறுப்பினர்களை நியமனம் செய்வார்?**
A) கலை B) அறிவியல்
C) விளையாட்டு
D) ஆங்கிலோ – இந்திய சமூகம்

66. (B) 67. (A) 68. (D) 69. (C) 70. (C) 71. (B) 72. (A) 73. (C) 74. (C) 75. (A)
76. (B) 77. (D) 78. (B) 79. (D)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**80. பின்வருபவர்களில் கட்சித்தாவல் தடைசட்டம் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியை தகுதி இழப்பு செய்ய அதிகாரமற்றவர் யார்?**

A) குடியரசுத் தலைவர்
B) மக்களவைத் தலைவர்
C) மாநிலங்களவைத் தலைவர்
D) தெரிவு (A) மற்றும் (C)

**81. அரசியலமைப்பு சாசன ஷரத்து 93–இன் படி, தேர்ந்தெடுக்கப்படும் மக்களவை சபாநாயகர் பதவிக்கான தேர்தல் அறிவிப்பை வெளியிடுபவர் யார்?**

A) பிரதமர்
B) இந்திய தேர்தல் ஆணையர்
C) குடியரசுத் தலைவர்
D) உச்ச நீதிமன்ற நீதிபதி

**82. நாடாளுமன்றத்தின் மக்களவையை நடத்துவதற்கு குறைந்தபட்சம் எத்தனை உறுப்பினர்கள் வருகை தர வேண்டும்?**

A) 55 B) 250
C) 100 D) 252

**83. பின்வருவனவற்றுள் 1962–ஆம் ஆண்டு முதல் இந்திய நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அம்சம் எது?**

A) கேள்வி நேரம்
B) பூஜ்ய நேரம்
C) குடியரசுத் தலைவரின் உரை
D) பிரதமரின் உரை

**84. 1921–ஆம் ஆண்டு பின்வரும் எந்த கமிட்டியின் அறிவுரைப்படி இரயில்வே பட்ஜெட், பொது பட்ஜெட்டிலிருந்து பிரிக்கப்பட்டது?**

A) ஹண்டர் கமிட்டி B) ஹோவர் கமிட்டி
C) அக்வொர்த் கமிட்டி D) பிரிக்கென் கமிட்டி

**85. 2003–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 91–இன் படி ஒரு மாநில சட்டசபை குறைந்தபட்சம் எத்தனை அமைச்சர்களை கொண்டிருக்க வேண்டும் (முதலமைச்சர் உட்பட)?**

A) 29 B) 12
C) 10 D) 25

**86. அரசியலமைப்பு சாசனத்தின் விதி 170–இன் படி ஒரு மாநிலத்திற்கு அதிகபட்சமாக எத்தனை சட்டசபை உறுப்பினர்கள் இருக்கலாம்?**

A) 500 B) 300
C) 400 D) 450

**87. 1986–ஆம் ஆண்டு தமிழக சட்ட மேலவை கலைக்கப்பட்ட போது அதன் தலைவராக பணியாற்றியவர் யார்?**

A) ம.பொ. சிவஞானம் B) சி.பி. சிற்றரசு
C) பி.வி. செரியன்
D) எம்.ஏ. மாணிக்க வேலு

**88. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்படும் நிதி ஆணையத்தை அமைப்பவர் யார்?**

A) பிரதமர் B) குடியரசுத் தலைவர்
C) ரிசர்வ் வங்கி கவர்னர் D) நிதியமைச்சர்

**89. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர்கள் ஓய்வுபெறும் வயது என்ன?**

A) 58 B) 60
C) 62 D) 65

**90. இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் (CAG) பின்வரும் எவருக்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்?**

A) பிரதமர் B) குடியரசுத் தலைவர்
C) நாடாளுமன்றம் D) உச்சநீதி மன்றம்

**91. 2003–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 89–ஆவது அரசியல் சாசன திருத்தம் பின்வரும் எதைப் பற்றியது?**

A) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையம் இரண்டாகப் பிரிப்பு
B) பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தேசிய ஆணையம் இரண்டாகப் பிரிப்பு
C) மகளிர் மற்றும் குழந்தைகள் தேசிய ஆணையம் இரண்டாகப் பிரிப்பு
D) கூட்டு மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம் அமைப்பது பற்றியது.

80. (C) 81. (C) 82. (A) 83. (B) 84. (C) 85. (B) 86. (A) 87. (A) 88. (B) 89. (D)
90. (C) 91. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**92. அரசியலமைப்பு சாசன ஷரத்து 76–இன் படி நியமிக்கப்படும் இந்திய அரசு தலைமை வழக்குரைஞர் பற்றிய பின்வரும் கருத்துக்களில் எது தவறு?**

A) உச்ச நீதிமன்ற நீதிபதியாக அமர்த்தப்பட தகுதியுள்ளவர்

B) இந்தியாவின் எந்த நீதிமன்றத்திலும் பார்வையாளராக இடம்பெற தகுதிவாய்ந்தவர்

C) இராஜ்ஜிய சபாவில் மட்டும் ஓட்டுரிமை பெற்றவர்

D) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உரிமை மற்றும் பாதுகாப்பு பெற உரிமை உண்டு.

**93. பின்வரும் எந்தவொன்று அரசியலமைப்பு சாரா அமைப்பு ஆகும்?**

A) இந்திய தேர்தல் ஆணையம்

B) நிதி ஆணையம்

C) திட்டக்குழு

D) அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**94. ஒருவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு யாது?**

A) 59 B) 35

C) 40 D) வயது வரம்பு இல்லை

**95. இந்திய உயர்நீதிமன்றங்களிலேயே அதிக கிளைகளைக் கொண்ட உயர்நீதிமன்றம் எது?**

A) கௌஹாத்தி B) மும்பை

C) சென்னை D) அலகாபாத்

**96. சமுதாய மேம்பாட்டுத்திட்டம் (1952), தேசிய சமூகப் பணிகள் திட்டம் (1953) ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆராய அமைக்கப்பட்ட கமிட்டி எது?**

A) பல்வந்த்ராய் மேத்தா கமிட்டி

B) அசோக் மேத்தா கமிட்டி

C) G.V.K. ராவ் கமிட்டி

D) L.M. சிங்வி கமிட்டி

**97. இந்தியாவில் முதன் முறையாக 1952–ஆம் ஆண்டு பஞ்சாயத்துராஜ் அமைப்பு இராஜஸ்தானின் எந்த மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டது?**

A) நாகாவூர் B) பீகானீர்

C) பாரமுல்லா D) ஜெய்சல்மர்

**98. தமிழகத்தில் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறைக்கு அதிகாரம் வழங்க பரிந்துரைத்த கமிட்டி எது?**

A) L.C. ஜெயின் கமிட்டி

B) அசோக் மேத்தா கமிட்டி

C) L.M. சிங்வி கமிட்டி

D) கோத்தாரி கமிட்டி

**99. பின்வருவனவற்றுள் இந்திய அரசின் நிர்வாகத் தீர்மானம் (Executive Resoultion) மூலம் உருவாக்கப்பட்ட அமைப்பு எது?**

A) திட்டக்குழு

B) தேசிய வளர்ச்சிக் குழு

C) மத்தியக் கண்காணிப்பு ஆணையம்

D) (A), (B), (D) மூன்றும்

**100. கீழ்க்காணும் நபர்களில் தேசிய வளர்ச்சிக்குழுவில் (N.D.C) உறுப்பினர் அல்லாதவர் யார் / யாவர்?**

A) மத்திய கேபினட் அமைச்சர்கள்

B) மாநில கேபினட் அமைச்சர்கள்

C) மாநில (ம) யூனியன் பிரதேச முதல்வர்கள்

D) இந்தியப் பிரதமர்

**101. 1993–இல் அமைக்கப்பட்ட தேசிய மனித உரிமைகள் ஆணையம் பற்றிய பின்வரும் கருத்துகளில் எது தவறு?**

A) இது நிர்வாகத் தீர்மானம் மூலம் உருவாக்கப்பட்டது.

B) இது ஒரு தலைவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டது.

C) உச்சநீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி இதன் தலைவராகப் பதவி வகிப்பார்.

D) இது மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993–இன் படி உருவாக்கப்பட்டது.

92. (C) 93. (C) 94. (D) 95. (A) 96. (A) 97. (A) 98. (A) 99. (D) 100. (B) 101. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**102. மத்தியக் கண்காணிப்பு ஆணையம் (CVC), 1964–ஆம் ஆண்டு நிர்வாகத் தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட காரணமாக இருந்த கமிட்டி எது?**

A) K.C. நியோகி கமிட்டி B) சந்தானம் கமிட்டி
C) முத்கல் கமிட்டி D) சிதம்பரம் கமிட்டி

**103. 1966–இல் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் (Administrative Reforms Commission-ARC) பின்வரும் எதனுடன் தொடர்புடையது?**

A) லோக்பால் உருவாக்கம்
B) லோக் ஆயுக்தா உருவாக்கம்
C) (A) மற்றும் (B)
D) மேற்கண்ட எதுவுமில்லை

**104. 1971–ஆம் ஆண்டு இந்தியாவில் முதன்முதலாக லோக் ஆயுக்தா அமைக்கப்பட்ட மாநிலம் எது?**

A) ஒடிசா B) மஹாராஷ்டிரம்
C) மத்தியப்பிரதேசம் D) இராஜஸ்தான்

**105. மக்களவையின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். இந்த ஐந்து ஆண்டுகள் என்பது பின்வரும் எந்த நாளிலிருந்து தொடங்குகிறது?**

A) தேர்தல் முடிவு வெளியான நாள்முதல்
B) பிரதமர் பதவியேற்ற நாள்முதல்
C) மக்களவையின் முதல் கூட்டம் தொடங்கிய நாள் முதல்
D) அமைச்சரவைக் குழு பதவியேற்ற நாள் முதல்

**106. இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி நாட்டின் நிதிக்கு முழுப் பொறுப்பானவர் யார்?**

A) ரிசர்வ் வங்கியின் கவர்னர்
B) நிதி அமைச்சர்
C) பிரதமர் D) குடியரசுத் தலைவர்

**107. இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி மத்திய அரசின் தலைவர் யார்?**

A) பிரதமர் B) குடியரசுத் தலைவர்
C) (A) மற்றும் (B) D) (B) மட்டும்

**108. பின்வரும் கூற்றுகளில் எது சரி?**

1) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை குடியரசுத் தலைவர் நேரடியாக பதவிநீக்கம் செய்யலாம்
2) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, உச்சநீதிமன்றத்தின் இதர நீதிபதிகளை நியமிக்க குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை வழங்குவார்.
3) குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் உச்சநீதிமன்ற அமர்வைக் கூட்ட உச்சநீதிமன்ற நீதிபதிக்கு அதிகாரம் உண்டு.

**சரியான விடையளி :**

A) 1, 2, 3 B) 2 மற்றும் 3
C) 1, 2, 3 D) அனைத்தும் தவறு

**109. லோக் அதாலத் நீதிமன்றங்கள் பற்றிய பின்வரும் கருத்துகளில் எது தவறு?**

A) விரைவாகவும், குறைந்த செலவிலும் நீதி கிடைக்க 1987–இல் ஏற்படுத்தப்பட்டது.
B) இது மக்கள் நீதிமன்றம், விரைவு நீதிமன்றம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படும்.
C) இதன்மூலம் குற்றவியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.
D) இது மற்ற நீதிமன்றங்களைப் போல் உச்சநீதிமன்றத்திற்கு கட்டுப்பட்டது.

**110. அரசியலமைப்புச் சாசனத்தின் பகுதி 4–இல் ஷரத்து 36 முதல் 51 வரை இடம் பெற்றுள்ள அரசுக் கொள்கைகளை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் பின்வரும் எந்த நாட்டின் அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டது?**

A) இங்கிலாந்து B) அயர்லாந்து
C) ஆஸ்திரேலியா D) இரஷ்யா

102. (B) 103. (C) 104. (B) 105. (C) 106. (B) 107. (B) 108. (B) 109. (C) 110. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

# புவியியல்

## அண்டம் (Universe)

1. நமது சூரியக் குடும்பம் பின்வரும் எந்த அண்டத்தைச் சார்ந்தது?
A) எல்.எம்.சி. அண்டம்
B) ஆண்ட்ரோமீடா அண்டம்
C) பால்வெளி அண்டம்
D) நீர்ச்சுழி அண்டம்

2. சூரியக் குடும்பத்தில் தானே ஒளிரும் பொருள் எது?
A) சூரியன் B) புவி
C) வியாழன் D) நிலவு

3. கோள்கள் சூரியனை பின்வரும் எந்த வடிவிலான பாதையில் சுற்றி வருகின்றன?
A) வட்டம் B) நீள்வட்டம்
C) அரைவட்டம் D) குறுக்குவட்டம்

4. வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகியவற்றினை எவ்வாறு அழைப்பர்?
A) கனக்கோள்கள்
B) நம்பிக்கை நட்சத்திரங்கள்
C) திடக்கோள்கள்
D) வாயுக்கோள்கள்

5. சூரியனை தங்களது அச்சில் மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றும் கோள் /கோள்கள் எவை?
A) வெள்ளி, யுரேனஸ் B) புவி, செவ்வாய்
C) சனி, வியாழன் D) வெள்ளி, புளூட்டோ

6. சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களில் முறையே மெதுவாக மற்றும் வேகமாக சுற்றும் கோள்கள் எவை?
A) முறையே வியாழன் மற்றும் வெள்ளி
B) முறையே வெள்ளி மற்றும் வியாழன்
C) முறையே புதன் மற்றும் நெப்டியூன்
D) முறையே நெப்டியூன் மற்றும் புதன்

7. சூரியக் குடும்பத்திலுள்ள கோள்களில் பிரகாசமானது எது?
A) புவி B) புதன்
C) வியாழன் D) வெள்ளி

8. போபோஸ் மற்றும் டைமோஸ் ஆகியவை பின்வரும் எந்த ஒரு கோளின் துணைக் கிரகங்கள்?
A) சனி B) செவ்வாய்
C) வியாழன் D) வெள்ளி

9. சூரியக் குடும்பத்தில் அதிக துணைக் கோள்களைக் கொண்ட கிரகம் எது?
A) வியாழன் B) சனி
C) யுரோஸ் D) நெப்டியூன்

10. சூரியக் குடும்பத்தில் துணைக் கோளற்ற கிரகம் எது?
A) புளூட்டோ, நெப்டியூன்
B) புதன், வெள்ளி
C) யுரேனஸ், புளூட்டோ
D) யுரேனஸ், புதன்

11. புளூட்டோ எனும் கோள் எப்பொழுது 'குள்ளக்கோளாக' வகைப்படுத்தப்பட்டது?
A) 2008 B) 2010
C) 2006 D) 2014

12. 'குறுங்கோள்' பட்டை என்பது பின்வரும் எந்த இரு கிரகங்களுக்கிடையே அமைந்துள்ளது?
A) செவ்வாய் மற்றும் வியாழன்
B) புதன் மற்றும் வெள்ளி
C) புவி மற்றும் செவ்வாய்
D) சனி மற்றும் வியாழன்

13. குள்ளக்கோள்கள் எனப்படும் பொருட்கள் எதைச் சுற்றி வருகின்றன?
A) சூரியன் B) வியாழன்
C) செவ்வாய்
D) முறையற்ற சுழற்சியுடையன

1. (C) 2. (A) 3. (B) 4. (D) 5. (A) 6. (B) 7. (D) 8. (B) 9. (A) 10. (B)
11. (C) 12. (A) 13. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com

**14. சந்திரன் புவியைச் சுற்றிவரவும், தன்னைத்–தானே சுற்றிக்கொள்ளவும் தேவைப்படும் கால அளவு என்ன?**
A) முறையே 27.3 மற்றும் 20
B) முறையே 30 மற்றும் 27.3
C) முறையே 30 மற்றும் 30
D) இரண்டிற்குமே 27.3 நாட்கள் தான்

**15. வால் நட்சத்திரத்தின் வால் எப்பொழுதும் ________________ திசையில் நீண்டிருக்கும்**
A) சூரியனுக்கு எதிர்
B) சூரியனுக்கு நேர்
C) சூரியனுக்கு வலப்பக்கம்
D) சூரியனுக்கு இடப்பக்கம்

**16. எரிநட்சத்திரங்கள் என்பது ________________ ஆகும்**
A) எரிகற்கள்
B) நட்சத்திரங்களின் ஒருபகுதி
C) வால் நட்சத்திரம் விட்டு சென்ற துகள்கள்
D) இவை தனி நட்சத்திரங்கள்

**17. சூரியக் குடும்பத்திற்கு அருகிலுள்ள நட்சத்திரம் எது?**
A) ஆண்ட்ரோமீடா
B) பிராக்ஸிமா சென்டாரி
C) L.M.C.
D) சைரஸ்

**18. சூரியக் குடும்பத்திற்கு அருகிலுள்ள மிகுந்த பொலிவான நட்சத்திரம் எது?**
A) ஆண்ரோமீடா
B) பிராக்ஸிமா சென்டாரி
C) ஆல்ஃபா சென்டாரி AB
D) சைரஸ்

**19. அண்டவெளியின் (Universe) தோற்றம் பற்றிய கோட்பாடு எது?**
A) குவாண்டம் கோட்பாடு
B) பிளாஸ்மா கோட்பாடு
C) கண்டப்பிளவு (Condinendal drift)
D) பெருவெடிப்பு (Big Bang)

**20. கருந்துளைகள் என்பவை ________________ ஆகும்**
A) கணக்கில்லா ஈர்ப்புவிசை கொண்ட பகுதி.
B) ஒளியை மட்டும் அனுமதிப்பவை
C) இதிலிருந்து புதிய நட்சத்திரங்கள் உருவாகின்றன.
D) அனைத்தும் சரி

## புவி

**1. புவியின் வயது என்ன?**
A) 4.52 பில்லியன் ஆண்டுகள்
B) 4.54 பில்லியன் ஆண்டுகள்
C) 6.02 பில்லியன் ஆண்டுகள்
D) 8.10 பில்லியன் ஆண்டுகள்

**2. புவியின் அடர்த்தி மற்றும் மேற்பரப்பளவு என்ன?**
A) முறையே 7.8 g/cm$^3$ மற்றும் 410,078000 km$^2$
B) முறையே 2.25 g/cm$^3$ மற்றும் 410,078000 km$^2$
C) முறையே 5.52 g/cm$^3$ மற்றும் 510,072000 km$^2$
D) முறையே 1.0 g/cm$^3$ மற்றும் 710,00000 km$^2$

**3. புவியில் அட்சக்கோடுகள் என்பவை ________________ ஆகும்.**
A) கிழக்கு மேற்காக வரையப்பட்ட கற்பனைக்கோடுகள்
B) வடக்கு தெற்காக வரையப்பட்ட கற்பனைக்கோடுகள்
C) புவியின் மத்தியில் வரையப்பட்ட கற்பனைக்கோடுகள்
D) புவியின் துருவப்பகுதிகளில் வரையப்பட்ட கற்பனைக்கோடுகள்

14. (D) 15. (A) 16. (C) 17. (B) 18. (C) 19. (D) 20. (A) ★★★
1. (B) 2. (C) 3. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

**4. பூமத்திய ரேகை என்பது ______________ ஆகும்**

**A)** 90° தீர்க்க ரேகை **B)** 180° அட்ச ரேகை
**C)** 0° தீர்க்க ரேகை **D)** 0° அட்ச ரேகை

**5. 0° தீர்க்கக் கோடு ______________ என்றும் அறியப்படும்.**

**A)** சர்வதேச தேதி கோடு
**B)** கிரீன்விச் தீர்க்கக்கோடு
**C)** 80° தீர்க்கக்கோடு
**D)** 180° தீர்க்கக்கோடு

**6. பூமத்தியரேகைப் பகுதியில் புவியின் சுற்றளவு என்ன?**

**A)** 12,715.43 கி.மீ. **B)** 12,756.36 கி.மீ.
**C)** 40,005 கி.மீ. **D)** 40,077 கி.மீ.

**7. $66\frac{1}{2}^{\circ}$ தெற்கு மற்றும் $66\frac{1}{2}^{\circ}$ வடக்கு ஆகியன எவ்வாறு அழைக்கப்படும்?**

**A)** முறையே அண்டார்டிக் மற்றும் ஆர்டிக் வட்டம்
**B)** முறையே தென் அயனக்கோடு மற்றும் வட அயனக்கோடு
**C)** முறையே ஆர்டிக் மற்றும் அண்டார்டிக் வட்டம்
**D)** முறையே கடகரேகை மற்றும் மகரரேகை

**8. ஒரு தீர்க்கக் கோட்டிற்கு இணையான கால அளவு எவ்வளவு?**

**A)** 3 நிமிடங்கள் **B)** 5 நிமிடங்கள்
**C)** 4 நிமிடங்கள் **D)** 7 நிமிடங்கள்

**9. அருணாச்சலப் பிரதேசத்திற்கும் குஜராத்திற்கும் இடையிலான கால வித்தியாசம் எவ்வளவு?**

**A)** 2 மணி 50 நிமிடங்கள்
**B)** 4 மணி 63 நிமிடங்கள்
**C)** 3 மணி 52 நிமிடங்கள்
**D)** 1 மணி 56 நிமிடங்கள்

**10. சூரியனை புவி தனது அச்சில் $23\frac{1}{2}^{\circ}$ சாய்ந்த வண்ணம் சுற்றி வருவதால் ஏற்படும் பயன் யாது?**

**A)** இரவு – பகல் மாற்றம்
**B)** பருவநிலை மாற்றம்
**C)** காற்று சுழற்சி
**D)** வசந்தகால மாற்றம்

**11. சூரியன் பூமத்தியரேகைக்கு நேராகப் பிரகாசிக்கும் நாட்கள் யாவை?**

**A)** செப்டம்பர் 23, மார்ச் 21
**B)** ஜூன் 21, செப்டம்பர் 23
**C)** மார்ச் 23, செப்டம்பர் 21
**D)** செப்டம்பர் 21, மார்ச் 23

**12. புவியில் உயிரினங்கள் கீழ்க்கண்ட எந்த ஒன்றில் காணப்படுகின்றன?**

**A)** நிலக்கோளம் (Lithosphere)
**B)** நீர்க்கோளம் (Hydrosphere)
**C)** வளிமண்டலம் (Atmosphere)
**D)** மேற்கண்ட மூன்றிலும்

**13. 'பான்தலாசா' எனப்படும் புவியின் ஆரம்பகால நிலப்பகுதிகள் புவியின் எப்பகுதியில் அமைந்திருந்தன?**

**A)** கிழக்குத் துருவம் **B)** மேற்குத் துருவம்
**C)** வட துருவம் **D)** தென் துருவம்

**14. புவியில் உள்ள பெரிய நிலத்திட்டுகள் எத்தனை?**

**A)** எட்டு **B)** ஏழு
**C)** ஆறு **D)** ஐந்து

**15. புவி மேலோட்டின் பகுதிகள் எவை?**

**A)** தீப்பாறைகள் **B)** உருமாறிய பாறைகள்
**C)** அலுமினோ, சிலிகேட் **D)** சியால், சிமா

**16. புவியின் காந்தப்புலத்திற்கு காரணமான புவி அடுக்கு எது?**

**A)** கருவம் (NIFE) **B)** சியால் (SIAL)
**C)** சிமா (SIMA) **D)** மேண்டில்

**17. நிலநடுக்க அலைகளை பதிவு செய்ய பயன்படும் கருவி யாது?**

**A)** வேரியோ மீட்டர் **B)** சீஸ்மோகிராஃப்
**C)** டாக்கோ மீட்டர் **D)** ஸ்பீடோமீட்டர்

**18. மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலநடுக்க அலை எது?**

**A)** R மற்றும் S அலைகள்
**B)** P மற்றும் L அலைகள்
**C)** கீழ்ப்புற (அ) P, S அலைகள்
**D)** மேற்புற (அ) L, R அலைகள்

4. (D) 5. (B) 6. (D) 7. (A) 8. (C) 9. (D) 10. (B) 11. (A) 12. (A) 13. (D)
14. (B) 15. (D) 16. (A) 17. (B) 18. (D)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



19. எரிமலையிலிருந்து வெளியேறும் பொருள் யாது?
A) லாவா B) ஆஷ்
C) ஸ்டீம் D) பியூமிஸ்

20. உலகின் மிகப்பெரிய செயல்படும் எரிமலை எது?
A) குர்திஸ் தீவு, கொலம்பியா
B) அகுவா
C) மோனோலோவா, ஹவாய் தீவு
D) அமுக்கா, அலூட்டியன் தீவு

21. கடல் அரிப்புடன் தொடர்புடைய நிலத்தோற்றங்களில் சரியான வரிசை எது?
A) வளைகுடா – ஓங்கல் – குகை – கடல்வளைவு– கடல்தூண் – எஞ்சியபாறை
B) கடல்வளைவு – வளைகுடா – குகை – எஞ்சியபாறை – கடல்தூண் – ஓங்கல்
C) குகை – வளைகுடா– கடல்வளைவு – கடல்தூண் – எஞ்சியபாறை – ஓங்கல்
D) ஓங்கல் – கடல்தூண் – குகை – எஞ்சியபாறை – கடல்வளைவு– வளைகுடா

22. சுற்றியுள்ள நிலப்பகுதிகளை விட உயரமாகவும், மேற்பகுதி தட்டையாகவும் அமைந்துள்ள நிலப்பகுதி யாது?
A) சிகர பூமி B) தட்டைப் பரப்பு
C) மேற்பரப்பு D) பீடபூமி

23. விரிந்த இரு நிலப்பரப்புகளை இணைக்கும் மிகக்குறுகிய இயற்கையான நிலப்பரப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
A) வளைகுடா B) நிலச்சந்தி
C) வரிகுடா D) பீடபூமி

24. மூன்று பக்கங்களும் நிலத்தால் சூழப்பட்ட நீர்பரப்பின் பெயர் என்ன?
A) நன்னிலம் B) நீர்ச்சேர்கை
C) பீடபூமி D) விரிகுடா (Bay)

25. செம்மண்ணின் செம்மை நிறத்திற்கு காரணம் என்ன?
A) அதில் கலந்துள்ள குப்ரஸ் ஆக்ஸைடுகள்
B) அதில் கலந்துள்ள இரும்பு ஆக்ஸைடுகள்
C) அதில் கலந்துள்ள சல்ஃபர் ஆக்ஸைடுகள்
D) அதில் கலந்துள்ள சிங்க் ஆக்ஸைடுகள்

26. ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நாளில் நிலவும் வெப்பநிலை, காற்றழுத்தம், காற்றின் திசை, மழைப் பொழிவு போன்றவற்றை குறிப்பது எது?
A) வானிலை B) காலநிலை
C) பருவநிலை D) மாற்றநிலை

27. நைட்ரஜன், ஆக்சிஜனுக்கு அடுத்தபடியாக வளிமண்டலத்தில் அதிக அளவில் கலந்துள்ள வாயு எது?
A) கார்பன் B) ஹைட்ரஜன்
C) ஆர்கான் D) ஹீலியம்

28. வளிமண்டலத்திலுள்ள நீராவியை மழைத்துளிகளாக மாற்றுவதில் முக்கியப் பங்காற்றுவது எது?
A) மாசுகள் B) காற்று
C) மண் D) தூசிகள்

29. இடி, மின்னல், மழை போன்ற நிகழ்வுகள் புவிப்பரப்பிலிருந்து எவ்வளவு உயரத்திற்குள் நடைபெறுகின்றன?
A) 15 கி.மீ. B) 16 கி.மீ.
C) 17 கி.மீ. D) 18 கி.மீ.

30. ஓசோன் படலம் எவ்வளவு உயரத்தில் பரவியுள்ளது?
A) 20 – 30 கி.மீ.–க்குள்
B) 45 – 20 கி.மீ.–க்குள்
C) 20 – 35 கி.மீ.–க்குள்
D) 35 – 40 கி.மீ.–க்குள்

31. வெளியடுக்கில் (Exosphere) உள்ள வாயுக்கள் யாவை?
A) ஹைட்ரஜன், ஹீலியம்
B) நைட்ரஜன், ஹீலியம்
C) ஆக்சிஜன், ஹைட்ரஜன்
D) ஹீலியம், ஹைட்ரஜன்

19. (A) 20. (C) 21. (A) 22. (D) 23. (B) 24. (D) 25. (B) 26. (A) 27. (C) 28. (D) 29. (B) 30. (C) 31. (A)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**32. மித வெப்ப மண்டலம் பரவியுள்ள அட்சம் யாது?**
A) 30° முதல் 90° வரை
B) 60° முதல் 30° வரை
C) 30° முதல் 60° வரை
D) 90° முதல் 60° வரை

**33. கடல் மட்டத்தில் காற்றழுத்த சராசரி யாது?**
A) 1022 மில்லி பார் B) 1011 மில்லி பார்
C) 1000 மில்லி பார் D) 1013 மில்லி பார்

**34. புவியின் சுழற்சி காரணமாக வட அரைக்கோளத்திலுள்ள காற்று வலதுபுறமாகவும் தென் அரைக்கோளத்திலுள்ள காற்று இடதுபுறமாகவும் திருப்பப்படும். இவ்விதி ________ என அழைக்கப்படுகிறது.**
A) ஃபெரல் விதி B) போரீஸ் விதி
C) ஸ்டீபன்ஸ் விதி D) பேரடே விதி

**35. வியாபாரக்காற்றுகள் என்றழைக்கப்படும் காற்று எது?**
A) கிழக்குக் காற்று B) மேற்குக் காற்று
C) வடக்குக் காற்று D) தென்மேற்குக் காற்று

**36. பகல் பொழுதில் காற்று ________ லிருந்து ________ ஐ நோக்கி வீசும்.**
A) வடக்கு, தெற்கு B) நிலம், கடல்
C) கடல், நிலம் D) கிழக்கு, மேற்கு

**37. ஹரிக்கேன், டைபூன், வில்லிவில்லி மற்றும் சமுனஸ் ஆகியவை எதனைக் குறிப்பிடுகின்றன?**
A) கோள் காற்றுகள் B) புயல்
C) தலக்காற்றுகள் D) பருவக்காற்றுகள்

**38. ஃபோன், லூ, சினூக், சிராக் போன்றவை எவ்வகைக் காற்றுகளாகும்?**
A) வெப்பக்காற்றுகள் B) குளிர்காற்றுகள்
C) பருவக்காற்றுகள் D) கோள் காற்றுகள்

**39. காற்றின் வெப்பநிலை 0°C க்கும் அதிகமானால் நீராவி ________ ஆகவும், 0°C க்கும் குறைவானால் ________ ஆகவும் சுருங்கும்**
A) பனித்துளி, நீர்த்துளி B) பனிக்கட்டி, நீராவி
C) நீர்த்துளி, பனித்துளி D) நீராவி, பனித்துளி

**40. அடர்பனி ஏற்படக்காரணம் யாது?**
A) குளிர்ந்த காற்று
B) புவியின் வேகமான சுழற்சி
C) குறைவான வெப்பநிலை
D) தரையை ஒட்டி நீராவி சுருங்குவது

**41. பூமத்தியரேகைப் பகுதியில் சராசரி வெப்பநிலை மற்றும் மழையளவு என்ன ?**
A) 27° C மற்றும் 250 செ.மீ.
B) 25° C மற்றும் 300 செ.மீ.
C) 30° C மற்றும் 200 செ.மீ.
D) 15° C மற்றும் 250 செ.மீ.

**42. உலகின் மிக ஆழமான (11,033 மீ) 'மரியானா டிரஞ்ச்' எந்த கடல்பகுதியில் அமைந்துள்ளது?**
A) ஆர்டிக் B) அட்லாண்டிக்
C) தென் பசிபிக் D) வட பசிபிக்

**43. கடற்பகுதியில் அதிக மீன்கள், எண்ணெய் வளம் போன்றவை கிடைக்கக்கூடிய பகுதி எது?**
A) கண்டத்திட்டு B) கடல்தரை
C) கண்டச்சரிவு D) கடற்கரை

**44. கடல் நீரின் சராசரி உவர்ப்பியம் (நீரில் கரைந்துள்ள உப்பின் அளவு) எவ்வளவு?**
A) 100 கிராம் / லிட்டர்
B) 70 கிராம் / லிட்டர்
C) 35 கிராம் / லிட்டர்
D) 50 கிராம் / லிட்டர்

**45. கடல் நீர் மட்டத்தில் சூரியன் மற்றும் சந்திரனால் ஏற்படும் உயர் மற்றும் தாழ் ஓதங்களுக்கிடையிலான கால இடைவெளி எவ்வளவு?**
A) 12 மணிநேரம் B) 6 மணிநேரம்
C) 4 மணிநேரம் D) 24 மணிநேரம்

**46. சூரியன், சந்திரன், புவி மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் வரும் பொழுது ஏற்படும் ஓதம் யாது?**
A) ஓதம் ஏற்படாது B) உயர் ஓதம்
C) வசந்தகால ஓதம் D) தாழ் ஓதம்

32. (C) 33. (D) 34. (A) 35. (A) 36. (C) 37. (B) 38. (A) 39. (C) 40. (D) 41. (A)
42. (C) 43. (A) 44. (C) 45. (B) 46. (C)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200

www.surabooks.com



**47. கடல் நீரோட்டங்களை காற்றின் திசைக்கேற்ப திருப்பும் விசை யாது?**
**A)** ஃபெரல் விசை **B)** கொரியோலிஸ்விசை
**C)** புவியீர்ப்பு விசை **D)** ஈர்ப்பு விசை

**48. பவளங்கள் புவிப்பரப்பில் எந்த அட்சக்கோடுகளுக்கு இடையே வளரும்?**
**A)** 30° வடக்கு – 30° தெற்கு
**B)** 15° வடக்கு – 15° தெற்கு
**C)** 20° வடக்கு – 20° தெற்கு
**D)** 15° வடக்கு – 25° தெற்கு

**49. புதுப்பிக்கத்தக்க வள ஆற்றலுக்கு எடுத்துக்காட்டு எது?**
**A)** கனிமம்
**B)** எண்ணெய் பொருட்கள்
**C)** நிலக்கரி **D)** சூரிய ஒளி

**50. பசுமை மாறாக் காடுகளில் வளரும் தாவரங்கள் யாவை?**
**A)** தேக்கு, எபோனி, ரோஸ்வுட்
**B)** ஒக், சைப்ரஸ், மேப்பில்
**C)** சால், சந்தனம், பிள்ளமருது
**D)** பைன், ஸ்புரூஸ், ஃபிர்

# இந்தியா

**1. இந்தியாவின் அட்சரேகைப் பரவல் என்ன?**
**A)** 8°4' N – 37°6' N **B)** 8°4' N – 37°8' N
**C)** 8°6' N – 37°4' N **D)** 8°6' N – 37°6' S

**2. இந்தியாவின் மேற்குமுனை (Western most Point) எது?**
**A)** குமரிமுனை **B)** இந்திரா கோல்
**C)** தாஃப்தார் **D)** குஹார்மோத்தி

**3. இந்தியாவின் திட்ட நேரமான 82° 30' கிழக்கு தீர்க்கம் எந்த இடத்தின் வழியாக செய்கின்றது?**
**A)** லக்னோ **B)** அலகாபாத்
**C)** புதுதில்லி **D)** ஐதராபாத்

**4. இந்தியாவின் நிலப்பரப்பில் முறையே மலைகள் மற்றும் குன்றுகள், பீடபூமிகள், சமவெளிகள் ஆகியவற்றின் சதவிகிதம் என்ன?**
**A)** முறையே 29.3, 27.7, 43
**B)** முறையே 30, 24, 56
**C)** முறையே 30, 30, 30
**D)** முறையே 30, 25, 40

**5. இந்தியாவின் மிக உயர்ந்த சிகரமான காட்வின் ஆஸ்டின் ($K_2$) இமயமலையின் எந்த பகுதியில் அமைந்துள்ளது?**
**A)** வடக்கு இமயமலை
**B)** தெற்கு இமயமலை
**C)** மேற்கு இமயமலை
**D)** கிழக்கு இமயமலை

**6. இந்தியாவின் மிக உயர்ந்த பீடபூமி எது?**
**A)** மாள்வா பீடபூமி **B)** தக்காண பீடபூமி
**C)** திபெத் பீடபூமி **D)** லடாக் பீட பூமி

**7. எவரெஸ்ட் சிகரம் அமைந்துள்ள மத்திய இமயமலைத் தொடர் பகுதியை எவ்வாறு அழைப்பர்?**
**A)** ஹிமாத்ரி
**B)** கங்கோத்ரி
**C)** யமுனாத்திரி
**D)** பூர்வாஞ்சல்

**8. ஆரவல்லி மலைத் தொடருக்கு மேற்கில் அமைந்துள்ள ராஜஸ்தான் சமவெளியின் முக்கிய ஆறு எது?**
**A)** சரஸ்வதி ஆறு **B)** யமுனா நதி
**C)** பிம்பேட்கா நதி **D)** லூனி ஆறு

**9. திபெத்தில் உருவாகும் 'சாங்கோ' நதி இந்தியாவில் எந்தப் பெயருடன் பாய்ந்தோடுகின்றது?**
**A)** தீஸ்த்தா **B)** பிரம்மபுத்ரா
**C)** கங்கை **D)** யமுனை

47. (B) 48. (A) 49. (D) 50. (A) ★★★ 1. (A) 2. (D) 3. (B) 4. (A) 5. (C) 6. (D) 7. (A) 8. (D) 9. (B)



enquiry@surabooks.com Ph: 9840455556 / 044 4862 2200